வானவில்

VAANAVIL

இதழ் 141 -143 | புரட்டாதி - ஐப்பசி - கார்த்திகை 2022

ISSUE 141 -143 | SEPTEMBER - OCTOBER - NOVEMBER 2022


# 22 ஆவது திருத்தச் சட்டமும் இனப்பிரச்சினைத் தீர்வும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் பெரும்பான்மை பலத்துடன் அரசியல் அமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தத்தை சிறீலங்கா பொதுசன பெரமுன முழுமையாக எதிர்க்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சட்டத் திருத்தத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர். அவர்களில் ஒரு பகுதியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்திருக்கின்றனர்.

வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தவர்களில் பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவும் ஒருவர். அதேநேரம் அவரது புதல்வர் நாமல் ராஜபக்சவும், மகிந்தவின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்சவும் சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர். பொதுசன பெரமுன முழுமையாக எதிர்த்திருந்தால் சட்டமூலம் நிறைவேற வாய்ப்பிருக்காது.

இந்தச் சட்டமூலம் அதிகப்படியான வாக்குகள் பெரும்பான்மையுடன் நிறைவேறியதற்கு இன்னொரு காரணம், பல்வேறு நோக்கங்களுக்காக சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லீம் கட்சிகள், மலையகக் கட்சிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் ஆகியோரும் சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்தமையாகும்.




'அரகலிய' என்ற போராட்டம் காரணமாக ஜனாதிபதி கோத்தபாய தலைமையில் இருந்த அரசாங்கம் முழுமையாகப் பதவி விலகி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்று பதவி ஏற்ற சூழ்நிலையில், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டதால், அதன் மூலம் பெரும் மாறுதல் ஒன்று நிகழும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் ஏற்பட்டிருந்தது. குறிப்பாக ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரம் பெருமளவு குறைக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தைப் படித்துப் பார்க்கையில் ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பு சம்பந்தமாக எந்தவிதமான வாக்கியங்களும் அதில் காணப்படவில்லை. மாறாக, ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதையே காண முடிகிறது. உதாரணமாக, ஜனாதிபதி விரும்பினால் அமைச்சர்களை நீக்க முடியும் என்பது மட்டுமல்லாமல், ஒரு கடிதத்தின் மூலம் பிரதமரையும் பதவி நீக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் முக்கியமான அம்சமாகும்.

இந்தச் சட்டத் திருத்தத்தில் இருக்கும் குறிப்பிடக்கூடிய விடயம், 2015 இல் பதவிக்கு வந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தால் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் ஜனாதிபதி கோத்தபாய தலைமையிலான அரசாங்கத்தால் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டிருந்த சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் ஏற்படுத்த வழி செய்யப்பட்டிருப்பதுதான்.

இன்னொரு முக்கியமான விடயம், இந்தச் சட்டத் திருத்தத்தில் இரட்டைப்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை

**போ**தைப்பொருள் பாவனையும் அது தொடர்பான சமுதாய சீர்கேடுகளும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களைப் போலவே, வடமாகாணத்திலும் துரிதமாகப் பரவி வருவதாக கடந்த செப்ரம்பர் மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வருபவர்களின் எண்ணிக்கைகளை அடிப்படையாக வைத்தே அவர்கள் இந்த அறிக்கையை யாழ் அரசதிபரிடம் கையளித்துள்ளனர். கஞ்சா மாத்திரமன்றி மாத்திரைகள், ஐஸ், ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களின் பாவனையும் வடக்கில் அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

'போதைப்பொருள் பாவனை பாடசாலைகளினுள் மாத்திரமன்றி, வைத்தியசாலைகளின் வளாகங்ககளினுள்ளும் உள்நுழைய தொடங்கி உள்ளது. ஒருகாலத்தில் தனிமனித ஒழுக்கத்திலும் நற்பண்புகளிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்த வடபிரதேசம், இன்று போதை அரக்கனின் கோரப்பிடியில் சிக்குண்டு தனது சுயத்தையும் மாண்புகளையும் இழந்து நிற்கின்றது. போதைப்பொருள் பாவனையின் நேரடி மற்றும் மறைமுக விளைவுகளால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது. உடல் ரீதியான பாதிப்புக்களுக்கு மேலதிகமாக, உளரீதியான மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாய் உணரப்படுகின்றன' என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இன்றைய இளந்தலைமுறையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக போதைப்பொருள் பாவனை இருக்கின்றது. இது அவர்களின் எதிர்காலத்தை திசைமாற்றி தவறான பாதையில் தள்ளி விடுகின்றது. ஒரு சமூகத்தில் போதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரிப்பது என்பது, அந்தச் சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்தச் சமூகம் வன்முறை மிக்கதாகவும், பாதுகாப்பற்றதாகவும் மாறும். இந்தப் புதைகுழியிலிருந்து இளைய தலைமுறையினரைக் காப்பது என்பது அவர்களின் குடும்பத்தினருக்கும் சரி, கல்விக்கூடங்களுக்கும் சரி, அரசுக்கும் சரி எளிதான காரியமல்ல.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள், உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர். தங்களைத் தாங்களே கட்டுப்படுத்தமுடியாத நிலையையடைகின்றனர் அவர்களின் சுயகட்டுப்பாடு முற்றாகத் தகர்கின்றது. போதைப் பொருட்களால் ஏற்படும் விளைவையும், உடல் மற்றும் மனதளவில் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் அவர்களால் உணர முடியாவிட்டால், அதற்கு அடிமையானவர்களால் அதிலிருந்து மீளவே முடியாதென்கிறது மருத்துவ ஆய்வு.

உலகில் 15 தொடக்கம் 64 வரையான வயதுடையோரில் 284 மில்லியன் மக்கள் போதைப்பொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனரென, ஐ.நா. சபையின் போதைப்பொருள் மற்றும் குற்ற ஆவண அலுவலகம் (UN Office on Drugs and Crime - UNODC) 2020 ஆம் ஆண்டு வெளியிட்ட மருத்துவ அறிக்கை கூறுகின்றது. அதேவேளையில், போதைப்பொருள் பாவிப்போரின் எண்ணிக்கை இலங்கையில் ஏறத்தாள 7 இலட்சமாக இருக்கலாமென அண்மைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத கஞ்சா (cannabis) விற்பனையைத் தடுப்பதற்காக, உலகின் பல நாடுகள் கஞ்சாப்பாவனையை சட்டரீதியாக அங்கீகரித்துள்ளன. இவ்வாறு அங்கீகரித்ததின் விளைவாகவும் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருவதாக UNODC அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

போதைப்பொருள் பாவனை என்பது இலங்கை தழுவிய பாரியதொரு பிரச்சனையாக உருவெடுத்திருக்கையில், மருத்துவ நோக்கங்கள் மற்றும் ஏற்றுமதிச் சரக்காகப் பயன்படுத்தும் வகையில் இலங்கையில் கஞ்சா செய்கையை முன்னெடுப்பதற்கான சட்டமொன்று கொண்டுவரப்படுமென சுதேச இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் இதற்கு இலங்கையில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள்.

போதைப்பொருள்கள் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பது மிகப் பெரிய வலைப்பின்னலைக் கொண்டது. இந்த வலைப்பின்னலில் பல முக்கிய புள்ளிகள் இருக்கிறார்கள். அவர்களைச் சட்டத்தின் பிடியில் கொண்டு வருவதற்காக நேர்மையுள்ள அரசதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனினும் அந்த முக்கிய புள்ளிகள் அரசியல் ரீதியாக அதிகாரம் கொண்டவர்களின் கையாட்களாகவோ அல்லது பெரும் பணபலம் கொண்டவர்களாகவோ இருப்பதால், இவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைக்க முடியாமலுள்ளது. அதனால் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த முடியாமல் போகின்ற நிலைமையும் உருவாகியுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பை மேற்கொள்ள ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும். மேலும் போதைப்பொருள் ஒழிப்புக்கு சட்டங்கள் மட்டும் இருந்தால் போதுமானதல்ல. சகலரது பங்களிப்பும் அவசியம். இதன் மூலம் மாத்திரமே போதைப்பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதற்கும், இளஞ்சந்ததியினரை அதிலிருந்து பாதுகாப்பதற்கும் உலகெங்கிலும் பல அரசசார அமைப்புகள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் போதைப்பொருள் உற்பத்தியிலும் விற்பனையிலும் பணம் சம்பாதிக்கும் நாசகாரசக்திகளை சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தாத வரையில், போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க முடியாது என்பதே உண்மை.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# பிரேசிலில் லூலா வெற்றியின் முக்கியத்துவம்



பிரேசிலில் நடைபெற்ற ஜனாதிபதிக்கான தேர்தலில் லூயிஸ் இனாசியா லூலா (Luiz Inacio 'Lula' da Silva) வெற்றி பெற்றிருப்பது, உலகம் முழுவதும் ஒருவிதமான நிவாரணப் பெருமூச்சுடன் வரவேற்கப்பட்டிருக்கிறது. அதிதீவிர வலதுசாரியான ஜெயிர் போல்சனாரோ (Jair Bolsonaro)வைத் தோற்கடித்து பிரேசில் ஜனாதிபதியாக அவர் வென்றிருப்பது, பிரேசிலின் எதிர்காலத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலத்தீன் அமெரிக்க பிராந்தியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

2022 ஒக்ரோபர் 30 அன்று நடைபெற்ற தேர்தலில், லூலா, (PT) எனப்படும் தொழிலாளர் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு 50.9 விழுக்காடு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். அவரை எதிர்த்து நின்ற போல்சனாரோவிற்கு 49.1 விழுக்காடு வாக்குகள் கிடைத்துள்ளன. 1980களில் ஜனநாயகம் மீளவும் புதுப்பித்து சீரமைக்கப்பட்ட பின்னர் இப்போது நடந்துள்ள ஜனாதிபதி தேர்தலில் கடும் போட்டிக்கு இடையே 21,25,334 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். பதவியிலிருந்த ஒரு ஜனாதிபதி தேர்தலில் தோற்பது என்பதும் இதுவே முதல் தடவையாகும்.

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையின்போதே லூலா எளிதாக வெற்றிபெற்றுவிடுவார் என்று தேர்தல் கணிப்பாளர்கள் பலர் முன்கூட்டியே ஊகித்திருந்தார்கள். அதேபோன்றே பல்வேறு ஆய்வுகளும், போல்சனாரோவைவிட லூலா இரண்டு இலக்க புள்ளிகள் முன்னணியில் இருப்பார் என்று காட்டின. எனினும், இக்கணிப்புகள் அனைத்தும் அக்டோபர் 2 அன்று நடைபெற்ற முதல் சுற்று முடிவின்போது தவறு என்று மெய்ப்பிக்கப்பட்டன. செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கையில் போல்சானாரோ 43.20 விழுக்காடு வாக்குகளே பெற்றிருந்த அதே சமயத்தில், லூலா 48.43 விழுக்காடு பெற்று வென்றார். வெற்றி பெறும் வேட்பாளர் 50 விழுக்காடு வாக்குகளைப் பெறுவதில் தோல்வியடைந்ததால், இரண்டாம் சுற்று வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் லூலா 50.9வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

லூலா 2003க்கும் 2010க்கும் இடையே இரு தடவை பிரேசில் ஜனாதிபதியாக இருந்தார். இது அவருக்கு மூன்றாவது தடவை. இந்தத் தடவை அவருக்கு மிகவும் சவாலானதாக இருந்தது. ஏனெனில் இந்தக் காலகட்டத்தில் பிரேசில் கணிசமான அளவிற்கு மாறியிருக்கிறது.

லூலா முதல் தடவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, பண்டங்கள் சந்தையில் ஓர் ஏற்றம் இருந்தது. இதன் காரணமாகத் தொழிலாளர் கட்சி அரசாங்கம் சமூக நலத்திட்டங்கள் பலவற்றைக் கொண்டுவந்து, பல இலட்சக்கணக்கான பிரேசில் மக்களை, வறுமையின் கோரப் பிடியிலிருந்து மீட்டது. 2014 இறுதிக்குள், தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த லூலாவும் அவரைத் தொடர்ந்து அவருக்குப் பின்னே வந்த டில்மா ரூசூஃப் (Dilma Rousseff) - உம் சேர்ந்து பிரேசில் பசி, பட்டினிக் கொடுமையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகப் பிரகடனம் செய்தனர்.

இப்போது அந்த நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. உணவு மற்றும் சத்துணவு இறையாண்மை மற்றும் பாதுகாப்பு மீதான பிரேசிலியன் ஆய்வு வலைப்பின்னல் (Brazilian Research Network on Food and Nutritional Sovereignty and Security) ஒன்றின்படி, 3 கோடியே 31 இலட்சம் மக்கள் தற்போது பசி, பட்டினிக் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள், இது சென்ற ஆண்டைக் காட்டிலும் இரு மடங்காகும் என்றும் தெரிவிக்கிறது.

கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட சமயத்தில் பிரேசிலில் சுமார் 7 இலட்சம் மக்கள் இறந்துவிட்டார்கள். இதற்கு ஆட்சிபுரிந்த போல்சனாரோவின் நிர்வாகச் சீர்கேடே காரணமாகும். கொரோனா வைரஸ் பெருந்தொற்று என்ற கூற்றையே போல்சனாரோ ஏற்க மறுத்தார். அதனால் அது பரவுவதைப்பற்றி அவர் கிஞ்சிற்றும் கவலைப்படாது இருந்தார். இதனால் நாட்டில் சுகாதார நெருக்கடியைக் கையாள முடியாத நிலை இயற்கையாகவே ஏற்பட்டது. அறிவியலை மறுத்த போக்கும், நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக சுகாதாரச் செலவினங்களில் வெட்டை ஏற்படுத்தியதும் கோவிட்-19 கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியை அதிகரித்தது. அந்த சமயத்தில் தடுப்பூசிகள் உற்பத்தியிலும், அவற்றை விநியோகிப்பதிலும் நடைபெற்ற ஊழல்கள், அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற குணத்தைத் தோலுரித்துக் காட்டின.

போல்சனாரோ பகுத்தறிவற்ற, அறிவியலற்ற நபர் மட்டுமல்ல, புவி வெப்பமயமாதலை மறுக்கின்ற நபராகவும் இருந்தார். இந்தப் பார்வைகளும் இதனுடன் கோர்ப்பரேட் ஆதரவு நிலைப்பாடும் பிரேசிலின் பாதுகாப்பு வளையத்தை பலவீனப்படுத்த இட்டுச் சென்றன, மழை பெய்துவந்த அமேசன்

காடுகள் பெரிய அளவில் எரியத் தொடங்கின. நடைபெறும் ஆபத்தை சூழலியல்வாதிகளும் (environmentalists), பசுமை செயற்பாட்டாளர்களும் (green activists) விரிவான அளவில் எடுத்துச் சொல்லி இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தபோதிலும், இந்த நபர் அவற்றையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. இந்த நிலங்கள் பெரும் வேளாண்–வர்த்தகக் கோர்ப்பரேஷன்களுக்கும், பெரும் நிலப்பிரபுக்களுக்கும் விவசாயத்திற்காகத் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

அரசியல் அரங்கில், போல்சனாரோ ஜனநாயக உரிமைகள் மீது கொடூரமான தாக்குதல்களை ஏவினார். பிரேசிலில் முன்பிருந்தவந்த ராணுவ மற்றும் எதேச்சாதிகார ஆட்சிகளுக்கு வெளிப்படையாகவே ஆதரவினைத் தெரிவித்தார். தன்னுடைய பாசிஸ்ட் ஆதரவு கொள்கைகளை வெட்கமேதுமின்றி வெளிப்படையாகவே பறைசாற்றத் தொடங்கினார், தொழிற்சங்கங்களையும், பூர்வகுடி மக்களையும், பெண்களையும், பெரும்பான்மை இன மக்களிடமிருந்து வித்தியாசமான பாலியல் நடைமுறைகளைக் கடைப்பிடித்திடும் சிறுபான்மையினரையும் (sexual minorities) கடுமையாகத் தாக்கினார். கம்யூனிச விரோத, இடதுசாரிகள் விரோத சிந்தனைகளைக் கொண்டாடினார்.

இவருடைய அறிவியலற்ற, பகுத்தறிவற்ற, சிறுபான்மையினருக்கு எதிரான, கம்யூனிசத்திற்கு எதிரான நிலைப்பாடுகளின் காரணமாக இவர் சுவிசேஷ கிறித்தவர்களின் ஆதரவினைப் பெற்றிருந்தார். இவர்கள்தான் இவருடைய முக்கியமான ஆதரவு தளமாகும். பிரேசிலியன் அரசியலிலும் சமூகத்திலும் வலுவான பிற்போக்கு சக்தியாக விளங்கும் சுவிசேஷ கிறித்தவ போதகர்கள், போல்சனாரோவிற்குப் பின்னால் அணிதிரண்டிருந்தனர், அவருடைய அறநெறி நிலைப்பாடுகளுக்கு ஆதரவு அளித்தனர். இத்தகைய மதஞ்சார்ந்த வலதுசாரிகள் இடதுசாரிகளுக்கு எதிராகத் தீவிரமாக போதனைகள் செய்து வந்தார்கள். ‘லூலா ஆட்சிக்கு வந்தால் தேவாலயங்களையெல்லாம் மூடிவிடுவார்’ என்று கூறி வந்தார்கள்.

இந்தவகையில்தான் போல்சனாரோ வலதுசாரி சிந்தனாவாதிகளை அணிதிரட்டினார். அதன்மூலம் சமூகப் பிளவுகளை ஆழமான முறையில் ஏற்படுத்தி வந்தார்.

போல்சனாரோவின் ஆதரவுத் தளமாக சுவிசேஷ கிறித்தவர்கள் இருப்பதோடு அல்லாமல், நவீன தாராளமய, சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளைத் தீவிரமாக ஆதரித்திடும் உயர் வர்க்கத்தினர், வர்த்தகப் புள்ளிகள் மற்றும் பெரு முதலாளிகள் வர்க்கத்தினரும் அவரை ஆதரித்து வந்தார்கள். வேளாண் கோர்ப்பரேஷன்கள் மற்றும் பெரும் நிலப்பிரபுக்களும் இவருடன் இருந்தனர். இவ்வாறு போல்சனாரோவின் பின்னால் அனைத்துத் தீவிரவாத வலதுசாரிகளும் அணிவகுத்திருந்தனர். இவ்வாறு ஆளும் வர்க்கங்கள் மற்றும் தீவிர வலதுசாரிகளின் ஆதரவு போல்சனாரோவிற்கு இருந்ததன் காரணமாகத்தான் இவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் ஊடகங்களும் இவருக்கு ஆதரவாக இருந்தன. இவர்கள் அனைவரும் சமூக ஊடகங்களையும் பயன்படுத்திக்கொண்டு, பொய் மூட்டைகளையும் பொய்ச் செய்திகளையும் பரப்பினர்.

இதற்கு நேரெதிராக, லூலாவிற்கோ சமூகத்தின் வறிய பிரிவினர் முழுமையாக ஆதரவு அளித்தனர். இவ்வாறு ஏழை மக்கள் முழுமையாக லூலாவுடன் இருப்பதால் பயந்துபோன போல்சனாரோ, குறைந்த வருமானம் ஈட்டும் குடிமக்களுக்கு நேரடியாக பணம் அளிக்கும் ஒரு சமூக நலத் திட்டத்தை ஒக்சிலியோ பிரேசில் (Auxilio Brasil) என்ற பெயரில் கொண்டுவந்து அவர்களை வென்றெடுத்திட முயற்சித்தார். கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக் காலத்தில் போல்சனாரோவின் அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்துவதில் முழுமையாகத் தோல்வியடைந்து, அனைத்துத்தரப்பினராலும் கடும் விமர்சனத்திற்கு உள்ளான நிலையில் ஒரு குறுகியகாலத் திட்டமாக இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும் இந்தத் திட்டமானது மக்கள் மத்தியில் வரவேற்பைப்பெற்று ஏழை மக்கள் மத்தியில் இருந்த லூலாவின் ஆதரவு தளத்தில் சற்றே சரிவை ஏற்படுத்தியதால், போல்சனாரோ இத்திட்டத்தைத் தொடர்ந்தார்.

இவ்வாறான அனைத்து முயற்சிகளின் விளைவாகவும், போல்சனாரோ லூலாவிற்கு கடும் போட்டியை இப்போது நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் அளித்தார். மேலும் போல்சனாரோ வலதுசாரி சக்திகள் மற்றும் மத்தியக் கட்சிகளின் (centre parties) ஆதரவுடன் நாடாளுமன்றத்திலும் (Congress), ஆளுநர்களுக்கான தேர்தல்களிலும் (governorships) மற்றும் பிராந்திய அளவிலான சட்டமன்றங்களிலும் (regional assemblies) (இவை அனைத்துக்கும் ஜனாதிபதிக்கான தேர்தலுடன், முதல் சுற்றுக்கான தேர்தல்கள் நடைபெற்றன.) பெரும்பான்மை பெறவும் இட்டுச் சென்றது. போல்சனாரோ மொத்தம் உள்ள 27 மாநிலங்களில் 14இல் வெற்றி பெற்றுள்ளார். நாடாளுமன்றத்தில் (Congress) வலதுசாரிக் கட்சிகள் தங்கள் பிரதிநிதித்துவத்தை (மொத்தம் உள்ள 513 இடங்களில்) 249 இடங்களை (இது பாதிக்குச் சற்றே குறைவு) அதிகரித்துக்கொண்டுள்ளன. லூலாவின் தொழிலாளர் கட்சிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் 141 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

இவ்வாறு வலதுசாரிகள் பிரதிநிதித்துவம் சட்டமன்றங்கள், நாடாளுமன்றத்தில் வலுவாக உள்ளதால் லூலா தன் நிகழ்ச்சிநிரலை அமல்படுத்துவதை சிரமத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றன. இவர் ஆட்சி புரியும் காலத்தில் இவர்களுடன் சில சமரசங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

லூலா வெற்றி பெறுவதற்காக ஏற்கனவே சில சமரசங்களைச் செய்து கொண்டிருக்கிறார். இவர் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றும்போது சுவிசேஷங்களில் உள்ள போதனைகளிலிருந்தும், கடவுள் குறித்தும் சுவிசேஷ கிறித்துவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சில வேண்டுகோள்களை விடுக்க முயற்சித்தார். இவருடைய துணை ஜனாதிபதிக்கான வேட்பாளர், ஜெரால்டோ அல்க்மின் (Geraldo Alckmin), இவருடைய முன்னாள் போட்டியாளர் மற்றும் மத்தியக் கட்சியின் (Centre Party) தலைவர். லூலாவின் கூட்டணி, கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள், தாராள-முதலாளிகள் (liberal-bourgeois) என அனைத்துத்தரப்பினரையும்

உள்ளடக்கியுள்ளது. இவர்கள் அனைவரும் ‘ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், வலதுசாரிகள் வளர்ச்சியை முறியடிப்போம், அமேசான் காடுகளைப் பாதுகாப்போம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்’ என்கிற ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்துள்ளனர்.

லூலாவின் வெற்றி பிரேசில் முழுவதும் உள்ள ஏழை மக்களால், ‘சுதந்திரமும் ஜனநாயகமும் மீளவும் கிடைத்துவிட்டது’ என்கிற உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. அவரே, இந்த வெற்றியை ஜனநாயக இயக்கத்திற்குக் கிடைத்த வெற்றி எனக் கூறியிருக்கிறார். அவர், வறுமை, பசி, பட்டினிக் கொடுமை, குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரித்தல் மற்றும் அமேசான் காடுகள் அழிக்கப்படுவதிலிருந்து அதனைப் பாதுகாத்தல் ஆகிய பிரச்சனைகள் உடனடியாக கவனம் செலுத்தப்படும் என்று உறுதிமொழியை அளித்திருக்கிறார்.

லத்தீன் அமெரிக்காவில் இடதுசாரித் தலைவர்களின் ஆட்சி அதிகரித்துக் கொண்டிருப்பது, உலகத் தலைவர்களை ஜனாதிபதி லூலாவை வாழ்த்துவதற்கு இட்டுச் சென்றுள்ளன. இவருடைய வெற்றி நிச்சயமாக ‘பிரிக்ஸ்’ (BRICS), (இதில் இந்தியாவும் ஓர் அங்கம்) மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள ‘செலாக்’ (CELAC) போன்ற பன்னாட்டுக்குழுக்களுக்கும் புதியதொரு நம்பிக்கையைக் கொண்டுவரும்.

இப்போது நடைபெற்ற தேர்தல்களில் போல்சனாரோ தோற்கடிக்கப்பட்ட போதிலும், அவர் பெற்றுள்ள வாக்குகளிலிருந்து சாமானிய மக்கள் மத்தியில் வலதுசாரி சித்தாந்தம் எந்த அளவிற்கு வேரூன்றியிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காணமுடிகிறது. லூலா நிர்வாகம், தான் அளித்திட்ட தேர்தல் உறுதிமொழிகளை அமல்படுத்தத் தவறினால், ஜனநாயகத்தை மீட்டெடுக்கத் தவறினால், மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கத் தவறினால், பசி, பட்டினிக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால், வலதுசாரிகள் மீளவும் தலைதூக்குவதற்கு இருக்கின்ற அச்சுறுத்தலைத் தடுக்க முடியாது.


நன்றி: பீப்பிள்ஸ் டெமாக்ரசி (நவம்பர் 2, 2022)

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதின் பின்னணி

தற்கால மனிதனை ஒத்த ஒரு இனம் பூமியில் வாழ்ந்துள்ளது. இதன் பெயர் நியான்டர்தல் (Neanderthals). இவர்கள் ஆசியா மற்றும் ஐரோப்பியப் பகுதிகளில் சுமார் 8 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துள்ளனர். இவர்கள் ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே தோற்றியுள்ளனர். பின்னர் சுமார் 3 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் நம் மனித இனம் (Homo sapiens) ஆப்பிரிக்காவில் தோன்றியது. பின்னர் சுமார் மனித இனம் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவை விட்டுப் பிற கண்டங்களுக்கு இடம்பெயர ஆரம்பித்தனர். பின்னர் என்ன நடந்தது எனச் சரியாகத் தெரியவில்லை.

நியான்டர்தல் இன மக்கள் படிப்படியாக இந்த பூமியில் வாழமுடியாமல் அழிந்து போனார்கள். ஆனாலும் மரபணு சோதனைகள் செய்ததில் ஒரு ஆச்சரியத்தை உணர்ந்தனர். ஐரோப்பா மற்றும் ஆசியக் கண்டத்தில் வாழும் மக்களிடையே நியான்டர்தல் இன மரபணு 4 விழுக்காடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதாவது தற்கால மனித இனத்துடன் நியான்டர்தல் இனம் இணைந்து ஒன்றரக் கலந்து விட்டதாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்தச் சூழலில் ஸ்வான்டே பாபு (Svante Pääbo) மற்றும் அவரின் கூட்டாளிகள் சேர்ந்து பண்டைய மனித இனத்தை ஆராய்ச்சி செய்தனர். அவர்கள் சைபிரியா பகுதிகளில் இந்த ஆராய்ச்சியை மேற் கொண்டனர்.




காரணம் இந்த பகுதிகளில் மனித எலும்புகள் மட்டும் அல்ல எந்த உயிரினத்தின் எலும்பாக இருந்தாலும் நீண்ட காலம் சேதமடையாமல் இருக்கும். அதனில் இருந்து எளிதில் மரபணுவைப் பிரித்தெடுக்க முடியும். ஆதிச்சநல்லூர் போன்ற பகுதிகளில் கிடைக்கும் பண்டைய எலும்புகளிலிருந்து மரபணு பிரித்தெடுப்பது சற்று கடினமானது. காரணம் இங்கு இருக்கும் சாதகமான வெப்பநிலையில் எலும்புகள் பூஞ்சை மற்றும் பாக்டீரியாவால் தின்று தீர்க்கப்படும். சைபீரியாவில் உள்ள கடும் குளிரில் பூஞ்சை மற்றும் பாக்டீரியாக்களின் கொட்டம் அடக்கப்படும். அதனால் பண்டைய எலும்புத் துண்டுகளிலிருந்து எளிதில் மரபணுவான DNA வை பிரித்தெடுக்க முடியும்.

பாபு மற்றும் அவரின் கூட்டாளிகள் சைபிரியாவில் ஒரு மனிதனை ஒத்த உடம்பின் விரல் ஒன்றைக் கண்டறிந்தனர். அந்த இனம் சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தது எனக் கண்டறிந்துள்ளனர். அந்த விரலின் எலும்பிலிருந்து மரபணுவான DNA வை பிரித்தெடுத்து ஆய்வு செய்தார். இந்த ஆராய்ச்சியின் முடிவு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. காரணம், அந்த விரல் தற்கால மனிதனுடையது இல்லை. மேலும் நியான்டர்தல் இனத்தைச் சார்ந்ததுவும் இல்லை! ஏன் மனிதனுக்குச் சகோதரனான மனித (சிம்பனிசி) குரங்குகளுடையதும் இல்லை! இந்த விரல் இதுவரை கண்டறியாத ஒரு புது மனித இனத்துடையது எனக்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# மலையகத் தமிழரின் ஆன்மா கோ.நடேசய்யர்

*19* ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய வணிகம், தொழிலாளர் ஏற்றுமதி! சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசு, தன் காலனி நாடுகள் மற்றும் தீவுகளுக்குத் தமிழர்களைக் கூலிகளாக அனுப்பிக் கொண்டிருந்தது. அவ்வாறு தமிழர்கள் அதிகளவில் சென்றிறங்கிய நாடுகளுள் இலங்கையும் ஒன்று.

கொடிய விலங்குகள் உலவிய மலையகக் காடுகளில் இறக்கிவிடப்பட்ட அடிமைத் தமிழர்கள், தங்களின் உடல், ஆவி ஆகிய இரண்டையும் தேயிலைக்கு உரமாக்கி, இலங்கையைப் பொன்விளையும் பூமியாக மாற்றினர். ஆனால் மண்ணைப் பொன்னாக்கிய தமிழர்களின் வாழ்க்கையோ அம் மலையகப் பள்ளத்தாக்கின் இருளைப் போல சூன்யத்தைப் பூசிக் கொண்டிருந்தது.

*20* ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை தொடர்ந்த அவ்விருளைக் கிழித்து மலையகத் தமிழர்களின் வாழ்க்கையில் வீசிய ஒளிக்கீற்று, அடிமை இந்தியாவின் புத்திரர்களைத் தன் கவிதையால் நிமிர வைத்த பாரதியாரைப் போன்று, தன் எழுத்தாலும், பேச்சாலும் இலங்கையின் மலையகத் தமிழர்களின் அடிமைத்தளைகளைப் பிளந்த மலையக பாரதி, கோதண்டராம நடேசய்யர்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மண்ணில் *1887* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ந் திகதி பிறந்தார். தஞ்சை மண்ணிலேயே வளர்ந்த நடேசய்யர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் ஆற்றல் மிக்க புலமையுடையவர். *1910* ஆம் ஆண்டிலேயே வங்கி நிர்வாகம், ஆயில் எஞ்ஜின்கள், இன்சூரன்ஸ் ஆகிய துறைகளில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டவர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக வர்த்தகத்தில் தமிழர்களும் தடம் பதிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், *1914*இல் வணிகர்களுக்காக 'வர்த்தகமித்திரன்' என்ற பத்திரிகையைத் தொடங்கி, நடத்தினார்.

தஞ்சை மாவட்டத்தின் பல இடங்களில் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கங்களை உருவாக்கினார். அச்சங்கத்தின் கிளை ஒன்றைத் தோற்றுவிக்க இலங்கைத் தலைநகர் கொழும்புக்குச் சென்றவர், அங்கே




மலைநாட்டில் இந்தியத் தமிழர்கள் அடிமைகளாகத் தேயிலைச் செடிகளோடு சேர்ந்து நடப்பட்டிருப்பதைக் கண்டு மனம் கொதித்து, இலங்கையிலேயே நிரந்தரமாகத் தங்கினார்.

*1920* ஆம் ஆண்டு தொடங்கி *1947* ஆம் ஆண்டு மறையும் வரை நடேசய்யரின் ஆன்மா, மலையகத் தமிழர்களுக்காகவே கலங்கரை விளக்கமாக ஒளிவீசிக் கொண்டிருந்தது. யாருமே நுழைய முடியாத 'முள்வேலியிட்ட மலையகத் தோட்டங்களில்' ஒரு புடவை வியாபாரியாக வேடமிட்டுச் சென்று, தோட்டப்புறத் தமிழர்களைச் சந்தித்த தீரம் நடேசய்யருக்கு உண்டு. மலையகத் தமிழர்களின் மோசமான வாழ்க்கைச் சூழலுக்குக் காரணம், கல்வியறிவின்மையும், விழிப்புணர்வின்மையுமே என்பதைக் கண்கூடாக நடேசய்யர் கண்டார். தோட்டப்புறத் துரைமார்களிடமும், கங்காணிகளிடமும் சிக்குண்டு, துன்பக்கேணியில் கிடந்த தமிழர்களின் அகக்கண்களைத் திறக்கவும் அவர் சூளுரைத்தார்.

*1921* ஆம் ஆண்டு 'தேசநேசன்' என்ற நாளிதழைத் தொடங்கினார். நடேசய்யரின் 'தேசநேசன்' இதழே, இலங்கையின் முதல் தமிழ் நாளிதழ். இந்தியத் தொழிலாளர்களின் துயரத்தை முதன்முதலாக ஆய்வு செய்து வெளியிட்ட சிறப்பு தேசநேசன் இதழுக்கு உண்டு. தோட்டப்புறத் தமிழர்களின் துன்ப வாழ்க்கையையும், அவர்களை அடிமைப்படுத்திய கரங்களையும் தேசநேசன் மூலம் வெளிச்சமிட்டுக் காட்டிய நடேசய்யர், கொழும்பு நகரில் வாழ்ந்த இந்தியத் தமிழர்களின் வேதனைகளை விவரிப்பதற்காகவே, 'தி சிட்டிசன்' என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார். நடேசய்யரின் பத்திரிகை எழுத்துகளும், பேச்சுகளும் ஆங்கிலேய அரசைத் திணறடித்தன. இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களைக் காப்பாற்றும் விதமாகத் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்த முன்னோடியும் நடேசய்யரே. இறக்குமதி செய்து வைத்திருந்த அடிமைகளை, சகமனிதர்களாக மாற்றி வந்த நடேசய்யரை நாடு கடத்திவிட அரசு பலமுறை முயற்சி செய்தது.

*1924* ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின் வாழ்வில் ஒரு பொன்னாளாகும். மலையகத்தில் உழன்ற தமிழர்களுக்காக, தாம் பிறந்த பொன்னாட்டைத் துறந்து, வந்த நடேசய்யருக்குப் பரிசாக சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தமிழர்கள் அளித்தனர். அன்று தொடங்கி, *1947* ஆம் ஆண்டு இடையறாது சட்டமன்றத்தில் ஒலித்த நடேசய்யரின் உரைகள் அனைத்தும் அற்புதமான அரசியல் இலக்கியமாகும். அரசியல் தலைமையையும், எதிரிகளையும் நடுங்க வைத்ததோடு, தமிழர்களின் வரலாற்றைக் குறிப்பிடும் கருவூலமாகவும் இவ்வுரைகள் இன்றும் இலங்கைப் பாராளுமன்ற ஆவணக் காப்பகத்தில் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன.

'தமிழ்த்தென்றல்' திரு.வி.க.வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நடேசய்யர், திரு.வி.க. வழியிலேயே *1924*–ஆம் ஆண்டில், இலங்கையில், 'தேசபக்தன்' என்ற இதழைத் தொடங்கினார். அரசியல் உலகில் மிக செல்வாக்குடன் இருந்த போதும், தேசபக்தனில் எழுத நடேசய்யர் தவறியதேயில்லை. நடேசய்யரின் இதழியல் சாதனைகளைக் குறிப்பிட வேண்டுமென்றால், *1921*இல் பாரதியார் இந்தியாவில் விட்டுச் சென்ற இடத்தை இலங்கையில் நடேசய்யர் நிரப்பினார் என்பதே உண்மை.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை உருவாக்குவதற்காகவே, *1930*இல் மலையகத்தின் தொப்பித் தோட்டத்தின் அடிவாரத்தில் குடியமர்ந்தார். தோட்டங்கள் தோறும் சென்று மக்களிடையே உரையாற்றி அம்மக்களை அடிமைத் தனத்திலிருந்து தட்டியெழுப்பினார்.

நடேசய்யரின் இப்பெரும் பணியில் தோள் கொடுத்த பெருமை, அவரின் மனைவி மீனாட்சி அம்மையையே சாரும். தோட்டத் தொழிலாளர்களை விழிக்கச் செய்ததோடு, தமிழையும் அவர்கள் செழிக்கச் செய்தனர்.

நூற்றாண்டுகளுக்கு மேலாக அம்மலைக்காட்டில் கூனிக்குறுகி நடந்த அந்த ஏழைத் தமிழ்க் கூலிகள் கம்பீரமாக நடை போட்டுச் செல்ல வேண்டும் என்று முதன்முதலாகப் பாடிய பேரான்மாக்கள், நடேசய்யரும், மீனாட்சியம்மை ஆகிய இருவரே. தொழிலாளர்களுக்காக இருவரும் பாடிய 'தொழிலாளர் சட்டக்கும்மி' பாடல்கள் தொழிலாளர்களின் இதயத்தில் மின்னலாகப் பதிந்து, அம்மலை முகடுகளில் எல்லாம் எதிரொலித்தன.

'தேசபக்தன்' இதழின் முகப்பில் புதிய மலையக ஆத்திசூடிப் பாக்களை எழுதி நடேசய்யர் வெளியிட்டார்.

மகாகவி பாரதியின் பாடல்களை இலங்கை முழுவதும் பரவச் செய்த பெருமை நடேசய்யரையே சாரும். பாரதி பற்றிய செய்திகளைத் தேடித்தேடி வெளியிட்டது தேசபக்தன் நாளிதழ்.

தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் கங்காணிகளையும், துரைமார்களையும் கேள்விக்குள்ளாக்கிய நடேசய்யரின் பாடல்கள், அத்தொழிலாளர்களின் வாழ்க்கையைக் காட்டும் தேசியகீதமாகத் திகழ்ந்தது.

நடேசய்யரின் வீரமிக்க உரைகளும், எழுத்துகளும் அதிகாரவர்க்கத்தின் ஆணிவேரையே அசைத்துப் பார்த்தன. 'இலங்கைத் தீவில் இந்தளவிற்குத் தேசத்துரோகம் செய்தவர் வேறு எவருமில்லை' என்று இலங்கை காவல்துறை அரசுக்கு எழுதி அனுப்பியதென்றால், அய்யரின் நெஞ்சுரத்துக்கு வேறென்ன சான்று வேண்டும்!

தேசநேசன் (1922–23), தேசபக்தன் (1924–29), தொழிலாளி (1929), தோட்டத்தொழிலாளி (1947), உரிமைப்போர், சுதந்திரப்போர், வீரன் சுதந்திரன் முதலிய தமிழ் இதழ்களும், சிட்டிசன் (1922), ஃபார்வர்ட் (1926), இந்தியன் ஒப்பினியன் (1936), இந்தியன் எஸ்டேட் லேபர் (1929) முதலிய ஆங்கில இதழ்களையும் வெளியிட்ட மாபெரும் இதழாளராக நடேசய்யர் திகழ்ந்தார். அத்துடன், வெற்றியுனதே, இந்தியா–இலங்கை ஒப்பந்தம், தொழிலாளர் சட்டப்புத்தகம், கதிர்காமம், அழகிய இலங்கை உள்ளிட்ட பதினான்கு நூல்களையும் அவர் படைத்துள்ளார். தொழிலாளர் சட்டப்புத்தகம் என்னும் நூல் ஒவ்வொரு தொழிலாளியின் கைகளிலும் இருந்ததுடன், அவர்கள் பெற வேண்டிய உரிமையையும் பட்டியலிட்டது. இலங்கை மலையக இலக்கியத்தின் தொடக்கம் என்று நடேசய்யரின் படைப்புகளை உறுதியாகக் குறிப்பிடலாம்.

மலையகத் தமிழர்களின் மனசாட்சியாகத் திகழ்ந்த நடேசய்யர், இற்றைக்கு 75 வருடங்களின் முன்னர், 1947 ஆம் ஆண்டு நவம்பர் 7ந் திகதி காலமானார்.

நடேசய்யர் என்னும் மானுடத்தென்றல் தொட்டுப்பார்க்காத சிகரங்கள் இலங்கையில் இல்லை. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் தடம் மாற்றிப் பயணிக்கச் செய்த தகைமையாளர் நடேசய்யர். நடேசய்யர் என்னும் தமிழ்ச்சுடர் மட்டும் பாதம் பதிக்காமல் இருந்திருந்தால், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மேலும் கசப்பாகவே இருந்திருக்கும், அவர்களின் தேயிலைப் போலவே!

# பருவநிலை மாற்றம்!

**கா**லநிலை மாற்றத்தின் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தவும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்கவும் ஐ.நா.சார்பில் காலநிலை 27ஆவது மாநாடு எகிப்து நாட்டிலுள்ள ஷார்ம் எல் ஷேக் (Sharm el-Sheikh) நகரில் நவம்பர் 6 முதல் நவம்பர் 18 வரை நடைபெற்றது. COP (Conference of the Parties) என்று அழைக்கப்படும் இம்மாநாடு 1995ல் தொடங்கி நடந்து வருகிறது.

மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ். ''உலக வெப்பநிலை தொடர்ந்து கூடி வருகிறது. இதன் காரணமாக, 'பருவநிலை நரகத்தை' நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் அதிவேகமான பயணத்தை நாம் மேற்கொண்டு வருகிறோம். தற்போது மனித குலத்தின் முன் இரண்டு வாய்ப்புகள்தான் உள்ளன. பருவநிலை ஒத்துழைப்பு ஒப்பந்தம் அல்லது தற்கொலை ஒப்பந்தம் ஆகிய இரண்டில் ஒன்றைத்தான் உலக நாடுகள் தேர்ந்தெடுக்க முடியும்'' என எச்சரிக்கை விடுத்தார்.




தொழில் புரட்சிக்கு முன்பிருந்ததைவிட 1.5 டிகிரி செல்சியஸ் மட்டுமே அதிகமாக உலகின் வெப்பநிலையை வைத்திருக்கவும், அதற்காக காற்றில் கலக்கும் காபனீர் ஒட்சைட் ($CO_2$) அளவைக் கட்டுப்படுத்தவும், பாரீஸில் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா. மாநாட்டில் உலக நாடுகள் ஒப்புக்கொண்டன. எனினும், அந்த இலக்கை எட்டுவதற்கு உலக நாடுகள் தீவிர கவனம் செலுத்தவில்லை.

பூமியில் தாவரங்களும் மற்ற உயிரினங்களும் உருவாகி தழைத்திருப்பதற்குத் தேவையான வெப்பத்தை வளிமண்டலத்தில் இருக்கும் காபனீர் ஒட்சைட், மெதேன் வாயு ($CH_4$), நைதரசன் ஒட்சைட் ($NO_2$), ஓசோன் ஆகிய வாயுக்கள் சூரியனிடமிருந்து பெற்றுத் தருகின்றன. இதனால்தான் அந்த வாயுக்கள் 'பசுமை இல்ல வாயுக்கள்' என்றழைக்கப்படுகின்றன. ஆனால், தொழில் புரட்சி ஏற்பட்டு தொழிற்சாலைகள், வாகனங்கள் பெருகி, அவற்றிலிருந்து வெளியாகும் கரியமிலவாயு வளிமண்டலத்தில் அளவுக்கு அதிகமாகக் கலந்துவருவதால் புவியின் வெப்பம் அதிகரித்து பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது.

தொழில்புரட்சிக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடுகையில் பூமியின் வெப்பநிலை ஏற்கெனவே 1.1 டிகிரி செல்சியஸ் அதிகரித்துவிட்டது. உலக வானிலையிலும் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாண்டு பூமியின் வடக்கு அரைக்கோளத்தில் அசாதாரண வெப்பம் உருவானது, சீனாவில் கடுமையான வறட்சி ஏற்பட்டது, அதேவேளையில், நைஜீரியா, பாகிஸ்தானில் பேரழிவு வெள்ளம் ஏற்பட்டு ஏராளமான உயிர்களையும், உடைமைகளையும் இழக்க நேர்ந்தது – இவையெல்லாம் புவி வெப்பமயமாதலின் வெளிப்பாடுகளே.

# உக்ரைன் போர்: மானுடத்தின் புறந்தள்ளப்பட்ட சிக்கல்கள்!




திடுக்கிடும் தலைப்புடன் ஒரு புதிய செய்தி வெளியாகிறது. ஆயுதங்களுக்காக உலகம் மேற்கொள்ளும் ஆண்டு செலவுத்தொகை 2 இலட்சம் கோடி டொலர்களை கடந்துள்ளது. இந்த பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. பட்டியலில் அடுத்து உள்ள பத்து நாடுகளின் ஒட்டுமொத்த செலவீனத்தை விட அமெரிக்காவின் செலவீனம் அதிகமாக இருக்கிறது. அமெரிக்காவின் உளவுத்துறை செலவீனங்களையும், அணு ஆயுத பராமரிப்பு செலவீனங்களையும் சேர்த்து கணக்கிட்டால் வரும் தொகை மட்டுமே 1 இலட்சம் கோடி டொலர்களை கடக்கும். இது மிக மிக அதிகமான தொகை ஆகும். மனித உழைப்பையும் அறிவையும் வீணடிக்கும் கடும் செயல்.

இன்னொரு செய்தி. சட்டவிரோத வரி ஏய்ப்புக்கு வழிவகுக்கும் நாடுகளில் குவிந்திருக்கும் செல்வத்தின் மதிப்பு 37 இலட்சம் கோடி டொலர்களை கடந்திருப்பதாக ஒரு கணிப்பு வெளியாகியுள்ளது. பெரும் செல்வந்தர்கள், மனித வளத்தை சூறையாடிச் சேர்த்த செல்வம் இப்படிப்பட்ட நாடுகளில் பணமாகவும், தங்கமாகவும், வைப்பு நிதியாகவும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த தொகையில் ஒரு சிறு பகுதி மட்டுமே. மேற்சொன்ன கணிப்பில் நிலம், விலை உயர்ந்த கலை பொருட்கள், நகைகள் போன்றவை உள்ளடங்காது. அவற்றையும் சேர்த்தால், கையளவு மனிதர்களிடம் குவிந்துள்ள செல்வத்தின் அளவு மிகக் கொடுமையானது. உலகின் முதல் 22 செல்வந்தர்கள் கையில் உள்ள சமூக வளத்தின் மதிப்பு, ஆப்ரிக்காவில் மொத்தம் உள்ள 3.25 கோடி பெண்களிடம் உள்ள ஒட்டுமொத்த செல்வத்தை விட அதிகம் ஆகும்.

உலகில் நிலவும் ஏழ்மை, பட்டினி மற்றும் எழுத்தறிவின்மை போன்ற சிக்கல்களுடைய அவல நிலைமை குறித்தும், கால நிலை மாற்ற பிரச்சனையால் எழும் அதிபயங்கர தாக்கங்கள் குறித்தும் தொடர்ந்து அறிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக செலவிடப்பட வேண்டிய நம்முடைய சமூக வளத்தின் பெரும் பகுதியை, ஆயுதங்களை குவிக்க செலவிடுவதுடன், வெளிநாடுகளில் பதுக்கியும் வைக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் 17 நிலைத்த நீண்டகால வளர்ச்சிக் குறிக்கோள்களை – பட்டினியை ஒழித்து அமைதியை நிலைநாட்டும் இலக்கினை – எட்டுவதற்கு ஆண்டுக்கு 2.5 இலட்சம் கோடி டொலர்கள் செலவிட வேண்டியுள்ளது. இப்போது இந்த குறிக்கோள்களை எட்டுவதற்கு மிகச் சிறிய தொகை மட்டுமே செலவிடப்படுகிறது. பெருந்தொற்றுக் காலத்திலும், அதன் பிறகு அதிகரித்து வரும் விலைவாசி உயர்வுக் காலத்திலும், இந்த செலவினங்களில் மென்மேலும் வெட்டு ஏற்படும். நாம் இந்தக் குறிக்கோள்களை விட்டு மென்மேலும் விலகிச் செல்வோம். மானுடத்தின் மிக முக்கியமான சிக்கலான பட்டினியை ஒழிக்கும் பாதையில் நாம் நெடுந்தொலைவு செல்லவேண்டியுள்ளது. (மக்கள் சீனம் தவிர. அங்கு 2021இல் கடும் ஏழ்மை ஒழிக்கப்பட்டுவிட்டது) உலக மக்களில் 300 கோடி பேர் ஏதோ ஒரு வித பட்டினியால் அவதிப்படுவதாக கணிக்கப்படுகிறது.

### விடுதலைக்கு பதிலாக ஆதிக்கம்

மானுடத்தின் இந்த சிக்கல்களை தீர்க்கும் உலகு தழுவிய ஒரு சமூக – அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு பதிலாக, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான ஜி7 நாடுகளும், தங்களின் உலக ஆதிக்கத்தை நீடிப்பதற்கான உத்தியை நோக்கியே செல்கின்றன. சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளும் வீழ்ந்த 1991 ஆம் ஆண்டுக்கு பின், மூன்றாம் உலக நாடுகள் கடன் வலையில் சிக்க வைக்கப்பட்டதில் இருந்து இந்த ஆதிக்க போக்கு தொடங்கியது. இந்த ஆதிக்கம் கால வரம்பின்றித் தொடரும் என்றும், அமெரிக்காவுக்கு எதிரான ஒரு அணியின் வரலாறு முடிந்து போனது என்றும், அமெரிக்க அறிவுஜீவிகள் மார் தட்டினார்கள். ஆனால் அமெரிக்காவும், ஜி7 நாடுகளும் “உலக பயங்கரவாதத்திற்கு எதிரான போர்” என்ற பெயரில் எல்லை மீறி சென்றதாலும், (குறிப்பாக சட்டவிரோதமாக ஈராக் மீது 2003இல் போர் தொடுத்தது) 2007–08இல் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும், அந்நாடுகளின் ஆதிக்கம் நிலை குலைய துவங்கியது.

***விஜய் பிரசாத்***

அமெரிக்கா மற்றும் ஜி7 நாடுகளில் வறண்டு போன வங்கி அமைப்பிற்கு நிதியளிக்க இந்தியா, சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளை அணுகின. அதனால், ஜி7 கூட்டமைப்பை மூடிவிட்டு, உலகளாவிய சட்ட–திட்டங்களை தீர்மானிப்பதை ஜி20 என்ற கூட்டமைப்பின் கீழ் கொண்டு வந்து, அதில் நிதி அளிக்கும் இந்த புதிய நாடுகளையும் சேர்க்க உறுதி அளித்தது. ஆனால் மேற்கத்திய வங்கிகள் மீண்டு வந்த பின்னர், ஜி20 ஒதுக்கப்பட்டு, முந்தைய ஜி 7 ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. இதர சக்திகளை எதிரியாக பார்க்காமல், மானுட சிக்கல்களை தீர்ப்பதில் கூட்டாளியாக பார்க்கலாம் என்ற முன்மொழிவை ஏற்க அமெரிக்கா மறுத்தது. இந்த கூட்டு சக்தியாக ஜி 20 அமைப்பில் பங்கு வகித்த சில

நாடுகள் சேர்ந்து BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா) கூட்டமைப்பு 2009 இல் துவங்கப்பட்டது. இந்நாடுகள் ஒன்றிணைந்து, மேற்கத்திய நாடுகளால் கட்டுப்படுத்தப்படாத, ஐ.எம்.எ.ஃப்-பின் சிக்கன நிகழ்ச்சிநிரல் அப்பாற்பட்ட, வளர்ச்சி திட்டங்களுக்கு வழி வகுக்கும் நிறுவன அமைப்பை ஏற்படுத்த முன் வந்தன.

BRICS கூட்டமைப்பு துவங்கப்படுவதற்கு முன், ரஷ்யாவின் விளாடிமிர் புதின் (அதுவரை பல விஷயங்களில் மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கி இருந்தார்) முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்று ஒரு முக்கிய உரையாற்றினார். "ஒரு துருவ உலகம் என்றால் என்ன?" என புட்டின் கேட்டார். "இந்த வார்த்தையை எவ்வளவு அழகு படுத்தி காட்டினாலும், அதன் அர்த்தம் ஒரே அதிகார புள்ளி, ஒரே ஒரு ஆதிக்க மையம் மற்றும் ஒற்றை ஆண்டான்" என்பதுதான். அந்த ஒற்றை அதிகார புள்ளி என்பது அமெரிக்காவையே குறிக்கிறது என்று அனைவரும் அறிந்திருந்தனர். மேற்கத்திய நாடுகளின் "சர்வதேச உறவுகளில் அதீதமாக பயன்படுத்தப்படும் கட்டுக்கடங்காத தாக்குதல்" குறித்து புட்டின் கடுமையாக விமர்சித்தார். மேலும் "சர்வதேச சட்டம்" மேற்கத்திய நாடுகளை அவை மேற்கொள்ளும் போர் குற்றங்களிலிருந்து பாதுகாப்பதை குறிப்பிட்டார். "யாரும் பாதுகாப்பாக உணர்வதில்லை. ஏனெனில் யாரும் சர்வதேச சட்டம் தங்களை பாதுக்காக்கும் அரண் என்பதாக உணரவில்லை. இப்படிப்பட்ட சூழல் ஆயுத குவியலை ஊக்குவிப்பதில் ஆச்சரியம் இல்லை". அமெரிக்கா ஐரோப்பாவை சுற்றி ஏவுகணை வளையத்தை உருவாக்குவதை நிறுத்திவிட்டு, 2002இல் அது கைவிட்டுவிட்ட "அணு ஆயுத ஏவுகணைக்கு எதிரான ஒப்பந்த"-த்திற்கு திரும்பிச் செல்ல வேண்டும் என புட்டின் குறிப்பிட்டார். அன்றைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்த முன்மொழிவை ஏற்க மறுத்தார்.

**அச்சுறுத்தல்கள்**

21 ஆம் நூற்றாண்டில் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். லிபியாவின் மீது 2011 ஆம் ஆண்டு நேட்டோ முன்னெடுத்த தாக்குதல் மேற்கத்திய நாடுகள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட எடுத்த முன்னெடுப்புகளுக்கான குறியீடாக அமைந்தது. இதுவே தெற்கு சீன கடல் பகுதி முதல் கரீபிய கடல் பகுதி வரை உலகளாவிய நேட்டோ ஆதிக்கம் தொடர்பான வாதங்களுக்கு முன்னோட்டமாக அமைந்தது. 30 நாடுகள் மீதான பொருளாதார தடை விதிப்பு மூலம் அமெரிக்காவையும், அதன் கூட்டாளி நாடுகளையும் எதிர்ப்பவர்களை ஒழுங்கு படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது மட்டுமல்லாமல் ஐ.எம்.எ.ஃப் அமைப்பின் புதுப்பிக்கப்பட்ட சிக்கன திட்டத்தின் காரணமாக, பல ஏழை நாடுகள் கொரோனா காலத்தில் கூட, தங்களுக்கு கடன் கொடுத்த செல்வச் செழிப்பு மிக்கவர்களுக்கு வழங்க வேண்டியிருந்த பணம், தங்கள் நாட்டு மக்களை காக்க சுகாதாரத்திற்கு மேற்கொண்ட செலவினை விடவும் அதிகம்.

2018இல் "தீவிரவாதத்திற்கு எதிரான போர்" நிறைவுற்றதாக அமெரிக்கா அறிவித்தது, அதன் தேச பாதுகாப்பு உத்தியில், சீனாவும் ரஷ்யாவும் அடைந்துவரும் எழுச்சியே மிகப்பெரும் ஆபத்தாக குறிப்பிட்டது. அமெரிக்கா பாதுகாப்பு செயலாளர் ஜிம் மாட்டிஸ் அமெரிக்காவை "நெருங்கி வரும் எதிரி நாடுகளை" கட்டுப்படுத்துவது என்று வெளிப்படையாகவே பேசினார். சீனா மற்றும் ரஷ்யாவை இவ்வாறு தம் எதிரி நாடுகளாக குறிப்பிட்ட அவர், அமெரிக்காவின் மொத்த ஆதிக்கத்தையும் பயன்படுத்தி இந்நாடுகளை அடிபணிய வைப்பது என்று பேசினார். ஐரோப்பா மற்றும் ஆசியாவை சுற்றி அமெரிக்காவின் பல இராணுவ தளங்கள் (மொத்தம் 800) உள்ளதோடு, ஜெர்மனி முதல் ஜப்பான் வரை ரஷ்யா மற்றும் சீனாவை முன் நின்று தாக்கும் பல கூட்டாளி நாடுகளை அமெரிக்கா கொண்டிருக்கிறது. அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகளின் கடற்படைகள், "பயணிப்பதற்கான சுதந்திரம்" என்ற பெயரில் ரஷ்யா (ஆர்டிக் பகுதி) மற்றும் சீனாவிற்கு (தெற்கு சீன கடல் பகுதி) எதிராக மிக அச்சுறுத்தலான படைப் பயிற்சிகளில் ஈடுபட்டன. இப்படிப்பட்ட செயல்பாடுகளோடு, 2014 ஆம் ஆண்டில் அமெரிக்கா உக்ரைன் நாட்டின் அரசியலில் தலையிட்டதும், 2015இல் தைவானிற்கு பெருமளவு ஆயுதங்கள் அளித்ததும், ரஷ்யாவையும், சீனாவையும் மேலும் மிரட்டுவதாக அமைந்தது. மேலும் 2018இல் அமெரிக்கா தன்னிச்சையாக "இடைநிலை தூர அணு-ஆயுத சக்திகள்" ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் காரணமாக, சர்வதேச அணு-ஆயுத கட்டுப்பாட்டு கட்டமைப்பை நலியச் செய்தது. ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் எதிரான போர்க்கள அணு ஆயுத உத்தியை அமெரிக்கா வகுத்துவருகிறது என்பதுதான் இந்த பின்வாங்கலின் வெளிப்பாடு.

அமெரிக்காவின் தேச பாதுகாப்பு உத்தியில் சீனாவையும், ரஷ்யாவையும் கட்டுப்படுத்துவது பற்றி குறிப்பிட்டிருப்பதும், "இடைநிலை தூர அணு-ஆயுத சக்திகள்" ஒப்பந்தத்திலிருந்து விலகியதும், ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் அமெரிக்காவால் உள்ள அச்சுறுத்தல் கற்பனையானது அல்ல என்பதை தெளிவாக்குகிறது. இதுவரை, ஆசிய பகுதியில் அமெரிக்காவின் நட்பு நாடுகளான தென் கொரியாவும், ஆஸ்திரேலியாவும் இடைநிலை தூர அணு-ஆயுதங்களை அனுமதிக்க தயாராக இல்லை. ஆனால் குவாம் மற்றும் ஒக்கினாவாவில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களில் ஆயுதங்களை குவிக்க வாய்ப்பு உண்டு. பல ஆண்டுகளாக இவ்வாறு கட்டமைக்கப்பட்டு வரும் அமெரிக்க அச்சுறுத்தலை ரஷ்யா உணர்ந்ததன் விளைவாகவே உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை முன்னெடுக்கிறது. நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர்ந்தாலும், இல்லாவிட்டாலும் அமெரிக்கா உக்ரேனில் அணு ஆயுதங்களை குவிக்க வாய்ப்பு உள்ளது என்ற கவலை எழுந்துள்ளது.

உக்ரைனில் நடந்துவரும் போர் பற்றிய வாதங்களுக்கு பின் ஒரு முக்கியமான கேள்வி உள்ளது: இயற்கையாகவே யூரேசியா (ஆசிய-கிழக்கு ஐரோப்பிய) நாடுகள் நெருங்கி வரும் போக்கை அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் அனுமதிக்குமா? இல்லையேல் இதை தடுக்க ஐரோப்பிய மற்றும் சில ஆசிய நாடுகளில் தலையிடும் முயற்சிகளை தொடருமா? ஐரோப்பிய நாடுகளை ஆங்கிலேய-அமெரிக்க-ஆர்டிக் கூட்டமைப்பினுள் கொண்டு வந்து, ஐரோப்பிய-ஆசிய நாடுகள் இணைப்பை, குறிப்பாக ரஷ்யா மற்றும் சீனா உடனான இணைப்பை

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பூச்சிக்கொல்லி மருந்துகளும் புதுப் புது வியாதிகளும்!

**நஞ்சானது விவசாயம்! நலம் குன்றியது வாழ்க்கை! பூச்சிக்கொல்லி மருந்துகளின் அளவுக்கதிகமான பயன்பாடுகள் அதிர்ச்சி தரும் விளைவுகள்! அரசுகளோ கோர்ப்பரேட்டுகளின் கைப்பாவை! பெரு நிறுவனங்களின் இலாபம், விவசாயிகளின் சோகம்! கலங்கடிக்கும் சுற்றுச் சூழல் ஒரு பார்வை!**




60 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் செலவில்லாத ஒர் தொழிலாக இருந்தது விவசாயம்! விதை, உரம், தண்ணீர், பூச்சிவிரட்டி எதற்கும் செலவில்லாமல் உழைப்பை மட்டுமே மூலதனமாக கொண்ட தொழிலாக விவசாயம் இருந்தது. உணவு என்பது முற்றிலும் இயற்கையின் கொடை! பருவகாலம் அறிந்து பயிர் செய்வது ஒன்றே மனிதனின் கடமை என்பதாக இருந்தது!

ஆனால், இன்றோ அந்த விவசாயம் என்பது பெரு நிறுவனங்கள் தரும் விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றை நம்பி மட்டுமே உயிர்த்திருக்கிறது! இது தான் நவீன காலத்தில் நடந்த தலை கீழ் மாற்றம்!

1954 ஆம் ஆண்டுவாக்கில் இந்திய நாட்டில் பூச்சிக்கொல்லி மருந்துகள் என்பனவற்றின் பயன்பாடு வெறும் 154 மெட்ரிக் தொன்கள் தாம்! அது 1994 ஆம் ஆண்டில் 80,000 மெட்ரிக் தொன்னாக உயர்ந்துவிட்டன! தற்போதோ 2,00000 மெட்ரிக் தொன்களைக் கடந்துவிட்டது!

இதனால் ஒரு ஹெக்டேருக்கு விவசாயம் செய்ய பூச்சிக் கொல்லிகளுக்கு மட்டுமே செலவழிக்கும் தொகை இந்திய ரூபாயில் 5,000 முதல் 6,000 வரையாகிறது! இது ஒரு பெரும் பொருளாதாரச் சுமை மாத்திரமல்ல, அந்த அளவுக்கு உணவையும், மண்ணையும், சூழலையும் நாம் நஞ்சாக்குகிறோம்.

இயற்கை முறையில் பயிர் விளைவிக்கப்பட்ட போது நன்றாக வளர்ந்து ஊட்டமுடன் இருந்த போது பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை எதிர்கொள்ளும் திறன் அவற்றுக்கு இயற்கையிலேயே அதிகமாக இருக்கிறது. தேவையானால் வேப்பம் புண்ணாக்கு போன்ற இயற்கை வழிமுறைகளிலான பூச்சிவிரட்டிகள் பயன்படுத்தப்பட்டன!

எப்போது இயற்கையில் கிடைத்த விதைகள் புறக்கணிக்கப்பட்டு, விஞ்ஞானிகள் ஆய்வால் கலப்பின விதைகள் உருவாக்கப்பட்டனவோ, அப்போது முதல் புதுப்புது பூச்சிகள் வரத் தொடங்கின! ஆகா! இதுவும் வியாபாரமாச்சு! 'புடியுங்க பூச்சிக்கொல்லி மருந்துகளை எடுங்கள் காசை!' என்று பெரு நிறுவனங்கள் கொள்ளை இலாபம் பார்க்க தொடங்கிவிட்டன!

விவசாயத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு தொடங்கியது முதல் தான் கொசுக்களின் பெருக்கமும் அதிகரித்தன! மலேரியா ஒட்டுண்ணிகளைச் சுமந்துசெல்லும் நுளம்புகள் பூச்சிக்கொல்லிகளை எதிர்க்கும் திறன் பெற்றவையாகவும் மாறிவிட்டன!

## சாவித்திரி கண்ணன்

இந்தியாவில் 273 வகையான பூச்சி கொல்லி மருந்துகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன! பதிவு செய்யப்படாமலும் பல பயன்பாட்டில் உள்ளன! மோனோகிரோட்டோபாஸ் (Monocrotophos), எண்டோசல்பான் (Endosulfan) போன்ற ஆபத்தான பூச்சிக் கொல்லிகள் பலவும் தடையை பொருட்படுத்தாமல் உற்பத்தியும், விற்பனையும் செய்யப்படுகின்றன! பெரும் இயந்திரங்களை பயன்படுத்தி பூச்சி மருந்து தெளிப்புகள் நடக்கின்றன!

இந்த வகையில் உள் நாட்டு உற்பத்தி போதாது என இந்த நஞ்சை வெளி நாடுகளில் இருந்தும் பல்லாயிரம் தொன்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன!

பூச்சிக்கொல்லி மருந்துகளின் தீவிரம் மனிதர்களுக்கு புற்று நோய், சிறு நீரகக் கோளாறு மற்றும் நரம்புக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. சர்வதேச சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதார இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, 13 – 19 வயதிலான குழந்தைகளுக்கு விவசாய நிலங்களை சுற்றி இருப்பவர்களுக்கு மூளைக் கோளாறு, உணர்ச்சி வெளிப்பாடு குறைவு போன்றவை ஏற்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பூச்சி மருந்துகள் வியாபாரத்தின் விளைவாக நோய் பெருக்கம் ஏற்பட்டு மாத்திரை, மருந்துகளின் வியாபாரமும் பெருகிவருகிறது. மருத்துவமனைகளின் தேவைகளும் கூடுகிறது. பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாட்டால் நாட்டில் மக்கள்பல்வேறு ஆராய்சிகள் பூச்சிக் கொல்லி மருந்து உணவில் ஊடுருவுயுள்ள காரணத்தால் அவை மனிதர்களுக்கு ஒருவித மனச் சோர்வை உண்டாக்குகின்றன எனச் சொல்கின்றன!

கவனக் குறைவு, மறதி, நரம்புத் தளர்ச்சி மற்றும் தலைவலி, சுவாசப் பிரச்சினை பூச்சிக் கொல்லி பயன்பாடு காரணமாகின்றன! இன்றைக்கு பர்கின்சன் நோய், புற்று நோய் பரவலாக வருகிறது! அதற்கு முக்கிய காரணம் இந்தப் பூச்சிக் கொல்லிகளும், ரசாயன உரங்களுமாகும்! ஒவ்வொரு ஆண்டும் பூச்சி மருந்தின் வீரியம் காரணமாக வயல் வெளிகளிலேயே மயக்கமடைந்து மரணிக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை சொல்லி மாளாது!

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# கலைத்துறையின் சமரசமில்லா கலகக்காரன்!

கிராமப்புறத்தில், அதிலும் ஒரு சாமானியக் குடும்பத்தில் பிறந்து, திண்ணைப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் மட்டுமே படித்த ஒருவர், மக்கள் கவிஞனாக மாறிய நிகழ்வு காலத்தில் அழியாத வரலாறு.

அடிமைகளின் விலங்கொடிக்க, மூடர்களின் சிந்தை விழிக்க, அநீதிகளை தகர்த்து எறிந்திட... இப்படி சமூக விடுதலைக்காக பன்முகத் தளங்களிலும் பாமரனாய் பயணித்து பட்டறிவால் ஞானம் பெற்று வீறு கொண்டு எழுந்தவன். கலையின் ஊடே கரைகண்ட அந்த மனிதர் எழுதிய பாடல்களில் ததும்பும் சீர்திருத்த கருத்துகளுக்கு இன்றைக்கும் இணையான ஆற்றல் வேறில்லை என்றால் அது மிகையில்லை.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையை அடுத்துள்ள செங்கப்படுத்தான்காடு எனும் கிராமத்தில் (1930 ஆம் ஆண்டு ஏபரல் 30ந் திகதி) பிறந்து 29 ஆண்டுகள் மட்டுமே இந்த மண்ணில் வாழ்ந்து (1959 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ந் திகதி) மறைந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

ஆனால், பாட்டுக்கோட்டையாக, மக்கள் கவிஞனாக அவரின் பாடல்கள் கூறும் தனித்துவமான சிந்தனையில் ஈர்த்து நம்மோடு வாழ்ந்து வருகிறார் என்றால் அது அவர் கொண்டிருந்த கொள்கைக்கு கிடைத்த சிறப்பு என்றே கூறலாம்.

இளம் பருவத்திலேயே எதையாவது செய்ய வேண்டும் என்ற இலக்கோடு பயணித்த கவிஞர் வாழ்நாளின் இறுதிவரையில் உழைப்பை நம்பியே ஓடிக் கொண்டிருந்தவர்.

தனது வாழ்நாளில் விவசாயி, மாடு மேய்ப்பவர், மாட்டு வியாபாரி, உப்பளத் தொழிலாளி, மாம்பழம், இட்லி, முறுக்கு, தேங்காய், கீற்று போன்ற வியபாரம், மீன், நண்டு பிடிக்கும் தொழிலாளி, மிஷின் ஓட்டுநர், தண்ணீர் வண்டிக்காரர், அரசியல்வாதி, பாடகர், நடிகர், நடனக்காரர், கவிஞர் என 17 வகையான தொழில்களை கையாண்டதாக ஜீவா குறிப்பிடுகிறார்.

தனது 14 ஆவது வயதில் அவரது கிராமத்தில் இருக்கும் துறையான் குளத்து நீரில் துள்ளி விளையாடிய



**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

மீன்கள்தான் கல்யாணசுந்தரத்தை முதலில் கவிதை எழுதத் தூண்டியுள்ளது.

*ஓடிப்போ ஓடிப்போ*
*கெண்டைக் குஞ்சே - கரை*
*ஓரத்தில் மேயாதே*
*கெண்டைக் குஞ்சே*
*தூண்டிக்காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத்*
*துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே...*

என்ற பாடலை எழுதி மனித நேயத்தின் வெளிப்பாட்டை ஒரு படைப்புக்குள் இருக்க வேண்டிய அழகியலை பாமரனும் புரிந்துணர வைத்தார்.

***தெ. அம்பிகாபதி***

விவசாயப் பணியின் வலியை உணர்ந்தவராக இருந்ததால், அதை நம்பியுள்ள உழவர்களின் வேதனையைப் போக்க பாடல்களால் மட்டுமல்லாது களத்தில் நின்று போராடவும் கற்றுத் தந்தவர்.

விவசாய சங்கங்கள் செயல்பாடு, பொதுவுடமை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால் அந்த அமைப்புகளின் நோக்கத்தை உயர்த்திப் பிடிக்க துணிந்து நின்றார். அதற்கு ஏற்ற தளமாக அவர் கருதிய கலை வடிவங்களில் முனைப்பு காட்டினார். பாடல்கள் எழுதுவது, நாடகங்களில் பங்கேற்று நடிப்பதில் ஆர்வம் காட்டினார்.

பொதுவுடமை இயக்கத்தின் போராளிகளாக திகழ்ந்து தலைமறைவு வாழ்க்கையோடு களம் கண்ட வாட்டாக்குடி இரணியன், ஜாம்புவானோடை சிவராமன் போன்றோருடன் இணைந்து இயக்கத்துக்காக விவசாயிகளை வென்றெடுக்க முனைப்புக்காட்டியவர்.

இந்த சூழ்நிலையில் பொதுவுடமை இயக்கத்தின் தோழரான இலக்கியப் பேராசான் என்று அழைக்கப்படும் ப.ஜீவானந்தம் தோழமையில் நெருக்கம் ஏற்பட்டது.

இதனால், பொதுவுடமை இயக்கத்தின் மீது இவர் வைத்திருந்த நம்பிக்கைதான் பின்னாளில் தத்துவ பாடல்களாக பதிவிறக்கமானது என்றுகூட கூறலாம். சீர்த்திருத்த கருத்துகளை தனது கற்பனை திறனை உரமாக்கி பட்டுக்கோட்டை வடித்த பல பாடல்களை 1954 முதல் 'ஜனசக்தி' இதழில் அச்சேற ஜீவா துணை நின்றார்.

அந்த இயக்கத்தின் நாடகமான கண்ணின் மணிகள் நாடகத்துக்கும் பட்டுக்கோட்டையார் பாடல்களை எழுதினார். அப்போது எழுதிய,

*தேனாறும் பாயுது*
*செங்கதிரும் சாயிது*
*ஆனாலும் மக்கள்*
*வயிறு காயிது...*

என்ற பாடல் வரிகள் பின்னாளில் திரைப்படப் பாடலாகியது.

திரைத்துறைக்குள் நுழைவதற்குள் பட்டுக்கோட்டை போட்ட எதிர்நீச்சல் கொஞ்சமல்ல. ஆனாலும், நம்பிக்கையோடு நின்ற அவருக்கு 1955இல் வெளியான 'படித்த பெண்' திரைப்படத்துக்கு முதல் முதலாக பாடல் எழுதி முத்திரை பதித்தார். கவிஞனின் வாழ்நாளில் 56 படங்களுக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி 180 பாடல்களைத் தந்த மகா கவிஞன்.

அந்த காலகட்டத்தில் கொடிகட்டிப் பறந்த பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், படத்தயாரிப்பாளர்கள் என பலரையும் வியந்து போகவும், அவர் எழுதிய பாடல்களின் தாக்கத்தால் வியர்வை காணவும் செய்த மக்கள் கவிஞர்.

*குட்டி ஆடு தப்பி வந்தால்*
*குள்ள நரிக்குச் சொந்தம்*

*குள்ளநரி மாட்டிகிட்டா*
*கொறவனுக்குச் சொந்தம்*

*தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்*
*பட்டதெல்லாம் சொந்தம்*
*சட்டப்படி பார்க்கப்போனால்*
*எட்டடிதான் சொந்தம்*
*உனக்கெது சொந்தம்*
*எனக்கெது சொந்தம்*
*உலகத்துக் கெதுதான் சொந்தமடா*

என்ற பாடலை பார்த்த பிறகு இசை அமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் கண்ணீர் விட்டு அழுதார் என்றால் அதுதான் பாடலாசிரியருக்கு கிடைத்த வெற்றி.

*நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட பார்வை*

*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்*

என்ற பாரதியின் வரிகளுக்கு இலக்கணமாக தான் கொண்ட பொதுவுடமைக் கொள்கையின் நெறிகளோடு சற்றும் சமரசமில்லாத போக்கை பாடல்களாக படைத்ததோடு, இயக்கப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் பட்டுக்கோட்டை.

திரைப்படப் பாடல்களில் உழைக்கும் பாட்டாளி மக்களின் எதார்த்த நிலை, அவர்களின் எதிர்ப்பார்ப்புகள், ஆவேசங்களை மேலோங்கச் செய்து, தன்னெழுச்சி சக்திகளை வெளிக்கொணர்ந்தவர் பட்டுக்கோட்டை. தனது குடும்பம் விவசாயம், கால்நடை வளர்ப்பு என பண்ணை சார்ந்த தொழிலில் ஈடுபட்டதால் அதன் வலியை, துயரங்களை உணர்ந்தவர் என்பதுடன் அதே நேரம் உழைப்பால் கிடைக்கும் மகிழ்ச்சியை அணு அணுவாக அனுபவித்தும் தனது படைப்புகளில் அம்பலப்படுத்தியவர் பட்டுக்கோட்டை.

பட்டுக்கோட்டையின் பாடல்கள் பொதுவுடமை சிந்தனைகளை தாங்கி வந்தாலும், அது பல நிலைகளில் திராவிட இயக்கங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்று கூறலாம். திரைப்பட நடிகராக திகழ்ந்து, பின்னர் தமிழகத்தின் முதல்வராக பதவி வகித்தவர் எம்.ஜி.ஆர். அவர் தான் வகிக்கும் முதல்வர் பதவிக்கான நாற்காலியில் நான்கு கால்கள் உள்ளன, அதில் ஒரு கால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்று எம்.ஜி.ஆர் கூறியுள்ளார்.

கைக்குள் கிடைத்த செல்லிடப்பேசி போன்ற தொழில்நுட்பங்களை மனதில் கொண்டு நாம் ஏதோ வளர்ந்து விட்டதாக மார்த்தட்டிக் கொள்கிறோம். அதேநேரம் சமூகத்தில் புரையோடி வரும் அவலங்கள் குறித்து கவலைக் கொள்வதில்லை. இன்றைய இளையோரில் பலரின் செயல் சமூகத்தில் கவலை அளிக்கவே செய்கிறது. போதை, மூடநம்பிக்கை என ஏதோ சில காரணிகளால் இளையோரின் சிந்தை திசை மாற்றப்படுவதை மறுக்க முடியாது.

சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியை வளரும் இளைய தலைமுறையினரால்தான் கொடுக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. அதனால்தான் மகாகவி பாரதி பாப்பாவுக்கு எழுதிய ‘ஓடி விளையாடு பாப்பா’ என்ற பாடலில் சமூகத்தில் நிகழும் அநீதிகளையும் அதனை எதிர்கொள்ள வேண்டிய தைரியம், நம்பிக்கையை விதைத்து எழுதினார்.

பாரதியின் வழியில் நின்று பட்டுக்கோட்டையார் சின்னப் பயலுக்கு எழுதிய பாடல் மூலம் இளைஞர்களுக்கு கூறிய வழிமுறைகள் எந்த காலத்துக்கும் பொருந்துவதாகவே அமைந்துள்ளன.

அரசிளங்குமரி என்ற படத்தில் இடம்பெற்ற,

*சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா - நான்*

*சொல்லப் போற வார்த்தையை நல்லா எண்ணிப் பாரடா...*

என்ற பாடலில் ‘ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான்டா வளர்ச்சி’ என்பதோடு, மூட நம்பிக்கையிலிருந்து விடுபடவும், தனியுடமை கொடுமைகளையும், பொதுவுடமையின் அவசியத்தையும் பறைசாற்றுகிறார். அதேபோல, ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற பாடலை ஏதோ தம்பிக்கு எழுதியதைப்போல இருந்தாலும் அரசியல், அதிகாரம், சமூகத்தில் பொறுப்பானவர்கள் அனைவருக்கும் எந்த காலத்திலும் பொருந்துவதாகவே கூறுகிறார்:

*நீ தாங்கிய உடையும் ஆயுதமும்*

*பல சரித்திரக் கதை சொல்லும் சிறைக்கதவும்*

*சக்தி இருந்தால் உனைக்கண்டு சிரிக்கும்*

*சத்திரம்தான் உனக்கு இடம் கொடுக்கும்.*

*சில பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் -*

*பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா*

என பாடலில் இடம்பெற்றுள்ள அத்தனை வரிகளும் மக்களை விழிப்படையவே சொல்லப்பட்டது.

*காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்கு*
*கையும் காலும் தானே மிச்சம்*

என விளிம்பு நிலை வாழ் மக்களின் நிலை குறித்த பாடிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் யாவும், திருவள்ளுவன், ஔவை போன்ற பெரியோர் வாய்மொழிப்போல பாடப் புத்தகங்களில் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டியது காலத்தின் அவசியம் என்பதை உணர்வோம். மக்களின் உணர்வுகளை, பிரச்னைகளை, தேவைகளை கலைத்துறையில் சமரசமில்லா கலைஞனாக நின்று பதிவு செய்த பெரும் கவிஞனுக்கு அவரது நினைவு நாளில் மரியாதை செலுத்துவோம்.

(ஒக்ரோபர் 8ஆ திகதி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு நாள்)

---

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

உலகில் இயற்கையால் படைக்கப்பட்ட எல்லா உயிரினத்திற்கும் ஒரு கடமை அல்லது தேவை என்பது இயற்கையாகவே தீர்மானிக்கப்பட்டு உள்ளது. பூச்சிகள் என்பவை தீமை மட்டும் செய்வதில்லை. நன்மைகளும் செய்கின்றன. பூச்சியினங்களை அழித்துவிட்டால் இயற்கையின் உணவு சுழற்சியும் நின்றுவிடும். மனிதகுலமும் அழிந்துவிடும். உலக மக்களின் 90 சதவிகித உணவுத் தேவைக்கு பயன்படும் முக்கிய தாவரங்களின் மகரந்த சேர்க்கை என்பது பூச்சிகளின் தயவால் தான் நடக்கின்றன. அவ்வாறு நடப்பதன் விலைவாகத் தான் விளைச்சல் அதிகரிக்கின்றன!

ஏற்கனவே, இரசாயன உரப் பயன்பாடுகளால் உணவும், சூழலும் நஞ்சாக மாறி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன!

உலகின் எந்தவொரு அரசாங்கமும் இதற்கு ஒரு போதும் தீர்வைக் காணமாட்டார்கள். நாம் தான் இயற்கை வழிமுறையை விடாப்பிடிவாதமாக பின்பற்றி நஞ்சற்ற உணவு, நோயற்ற வாழ்வை வென்றெடுக்க வேண்டும். காய்கறியில் நஞ்சு இல்லா சாகுபடியை மேம்படுத்த தோட்டக்கலைத் துறை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த முன்வர வேண்டும். விவசாயிகள் தடை செய்யப்பட்ட மருந்துகளை தவிர்த்து வேப்பம் புண்ணாக்கு, வேம்பு கலந்த மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

# தலைசிறந்த சமூக அமைப்பை நோக்கிய சீனாவின் பீடுநடை

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது மாநாடு 22.10.2022 அன்று வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது. 9 கோடியே 60 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு உலகிலேயே மிகப்பெரிய அரசியல் கட்சியாக இருக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு உலக அரங்கில் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டதாக அமைந்தது. புதிய தலைமையும், மூன்றாவது முறையாக பொதுச் செயலாளராக ஜி ஜின்பிங்கும் (Xi Jinping) தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாநாடு நடந்த வேளையில், கடந்த பத்தாண்டுகளில் மக்கள் சீனம் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி சர்வதேச அரங்கில் விவாதம் நடந்தது. கருத்துக்களைச் சொன்ன சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார நிபுணர்கள் அனைவருமே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு இல்லாமல் இத்தகைய வளர்ச்சி சாத்தியமே இல்லை என்று கூறினர்.

கடுமையான வறுமை ஒழிப்பு, விண்வெளி ஆய்வில் சாதனைகள், உற்பத்தியில் முதலிடம், நாட்டின் பொருளாதாரம் இரட்டிப்பு, அரசியல் நிலைத்தன்மை உள்ளிட்டவை கடந்த பத்தாண்டு சாதனைகளில் சில அம்சங்களாக இருக்கின்றன. "மார்க்சியம் அறிவியல் தன்மை கொண்டது மற்றும் அது நடைமுறையில் செல்லத்தக்கது என்று சீனாவில் முழுமையாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் நவீனம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக உலகம் முழுவதும் சோசலிசத்திற்கு ஆதரவான நிலை உருவாகியுள்ளது'' என்று ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கென்னடி ஜூகானோவ் (Gennady Zyuganov) கருத்து தெரிவித்துள்ளார். சர்வதேச அளவில் இடதுசாரி சக்திகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் சீனாவின் வளர்ச்சி அமைத்துள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

1978 ஆம் ஆண்டில் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 2 விழுக்காடாக இருந்த சீனப் பொருளாதாரம், தற்போது 18 விழுக்காட்டைத் தாண்டியுள்ளது. 70 கோடி கிராமப்புற மக்களை வறுமையின் பிடியில் இருந்து வெளியேற்றியிருக்கிறார்கள். உலகின் தொழிற்சாலை என்று அழைக்கும் அளவுக்கு உற்பத்தித்துறையில் சீனா முன்னேறியுள்ளது. வருங்காலத்திலும் புதிய சாதனைகளை சீனா படைக்கும் என்று ஜப்பானின் முன்னாள் பிரதமரான யுகியோ ஹடோயமா (Yukio Hatoyama) கூறியுள்ளார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோசலிச அரசின் தலைமை இந்த சாதனைகளோடு திருப்தி அடைந்து விடவில்லை.

கட்சியின் பொதுச்செயலாளராக மூன்றாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஜி ஜின்பிங், "அனைத்து வகைகளிலும் தலைசிறந்த நவீன சோசலிச நாடாக சீனாவை மாற்றும் புதிய பாதையில் நடைபோடுகிறோம்'' என்று கூறியிருக்கிறார். 2035 ஆம் ஆண்டிற்குள் இதை சாதிக்க இலக்கும் நிர்ணயித்திருக்கிறார்கள். சீனாவின் சிறப்பம்சமே, இலக்குகளை கால வரம்புக்கு முன்னதாகவே நிறைவேற்றுவது என்பது குறிப்பிடத்தக்கதாகும். செழிப்பான, வலுவான, ஜனநாயக, கலாச்சாரத்தில் முன்னேறிய, நல்லிணக்கம் கொண்ட மற்றும் அழகான நாடு என்பதையே தலைசிறந்த நவீன சோசலிச நாடு என்பதற்கான இலக்கணமாகச் சொல்லியுள்ளனர். மற்ற சமூக அமைப்புகளைப் போலவே சோசலிச சமூக அமைப்பும் மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற பிரெடரிக் ஏங்கல்சின் கூற்றை மக்கள் சீனம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டு நாட்டின் மிக முக்கியமான அரசியல் நிகழ்வான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் (CPC) 20வது தேசிய காங்கிரஸ் பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில் 16.10.2022 அன்று தொடங்கியது. Xi Jinping 20வது CPC தேசிய காங்கிரஸிற்கு தனது அறிக்கையில் "வளர்ச்சி'' பற்றி 100 முறை குறிப்பிட்டுள்ளார்.

"இது ஒரு புதிய வளர்ச்சி முறையை உருவாக்குவதையும், விரைவுபடுத்துவதையும், உயர்தர வளர்ச்சியைப் பின்பற்றுவதற்கும் சீனாவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. நாட்டின் புதிய வளர்ச்சித் தத்துவத்தை அனைத்துத் துறைகளிலும் முழுமையாகவும், உண்மையாகவும்



பயன்படுத்தவும் வேண்டும். சோசலிச சந்தைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களைத் தொடர வேண்டும். உயர்தரத் திறப்பை (high-standard opening-up) ஊக்குவிக்க வேண்டும். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தும் வகையில் புதிய வளர்ச்சி வடிவத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும்" என்று ஜி அழைப்பு விடுத்தார்.

இவை அனைத்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளாதார ஓட்டங்களுக்கு இடையே நேர்மறை தொடர்புகளை கொண்டுள்ளது.

**உலகத்திற்கான வாய்ப்புகள்:**

"சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கடந்த 10 ஆண்டுகளில் 54 டிரில்லியன் யுவானில் இருந்து 114 டிரில்லியன் யுவானாக வளர்ந்துள்ளது. இது உலகப் பொருளாதாரத்தில் 18.5 சதவீதமாக உள்ளது. இது 7.2 சதவீத புள்ளிகள் அதிகரித்து வருகிறது" என்று ஜி ஜின்பிங் தெரிவித்தார்.

2013 முதல் 2021 வரையிலான உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு சராசரியாக 38.6 சதவீதம் வரை சீனா பங்களித்துள்ளது என்றும் இது ஒட்டுமொத்த ஜி 7 நாடுகள் வளர்ச்சியை விட அதிகமானது என்றும் தேசிய புள்ளியியல் அலுவலகம் (NBS) வெளியிட்ட விவரங்கள் அடிப்படையில் தெரிவித்தார்.

தற்போதைய COVID-19 தொற்றுநோய், முதலாளித்துவ நாடுகளால் அதிகரித்து வரும் பாதுகாப்புவாதம், உலகமயமாக்கலுக்கு எதிராக குறிப்பாக சீனாவுக்கு எதிராக முதலாளித்துவ நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிப்பதற்காக, சீனா தனது புதிய "இரட்டை சுழற்சி" வளர்ச்சி முறையை வெளியிட்டது.

"உள்நாட்டு சந்தையை பிரதானமாகக் கொண்டு, அதே நேரத்தில் வெளிநாட்டு சந்தையை பலப்படுத்தக்கூடிய முறைகளைக் கையாண்டு தற்காத்துக் கொண்டது. சீனாவின் புதிய வளர்ச்சி முறை மூடிய கதவுகளுக்குப் பின்னால் உள்ள வளர்ச்சி வளையம் அல்ல. வெளி உலகிற்குத் திறக்கும் அதன் அடிப்படை தேசியக் கொள்கைக்கு சீனா என்றும் உறுதி பூண்டுள்ளது. பரஸ்பர நன்மை பயக்கும் திறப்புக் கொள்கையை கடைபிடிப்பதில் சீனா உறுதிபூண்டுள்ளது" என்றும் ஜி கூறினார்.

"அதன் சொந்த வளர்ச்சியுடன் உலகிற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும், அனைத்து மக்களுக்கும் அதிக நன்மைகளை வழங்கும் திறந்த உலகளாவிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தனது பங்களிப்பை வழங்கவும் சீனா பாடுபடுகிறது," என்று அவர் மேலும் கூறினார்.

**உயர்தர திறப்பு:**

ஐரோப்பாவுடன் வர்த்தகத்தை சீனா பல மடங்கு உயர்த்தி உள்ளது. 82 வழித்தடங்களுடன், சீனா–ஐரோப்பா சரக்கு ரயில்கள் இப்போது 24 ஐரோப்பிய நாடுகளில் உள்ள 200 நகரங்களை இணைத்துள்ளது. ஐரோப்பா முழுவதையும் உள்ளடக்கிய போக்குவரத்து வலையமைப்பை உருவாக்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், சீனா–ஐரோப்பா சரக்கு ரயில் பயணங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 5 சதவீதம் உயர்ந்துள்ளது. மொத்தம் 1.02 மில்லியன் TEU (twenty foot equivelent unit) சரக்குகள் (containers) கொண்டு செல்லப்பட்டன. இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 6 சதவீதம் அதிகரித்துள்ளது என்று சீனா ஸ்டேட் ரயில்வே குரூப் கோ., லிமிடெட் வழங்கிய தரவுகளிலிருந்து தெரிய வருகின்றது.

# எழுத்தாளர் லெனின் மதிவானம் காலமானார்

**இ**லங்கை கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளர் மற்றும் பிரபல எழுத்தாளர் லெனின் மதிவானம் தமது 51ஆவது வயதில் 13.11.2022 அன்று காலமானார்

ஹட்டன் – காசல்ரீயை பிறப்பிடமாக கொண்ட லெனின் மதிவானம், மலையகத்தின் சிறந்த கல்விமான், எழுத்தாளர், திறனாய்வாளர் என பன்முக ஆளுமைமிக்கவராக அறியப்பட்டிருந்தார். ஆசிரியராக தொழிலைத் தொடங்கிய இவர், கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

லெனின் மதிவானம் மார்க்சிய சித்தாந்தத்தின் ஊடாகப் படைப்புகளை நோக்கி அப்படைப்புகள், தொடர்பான விமர்சனங்களை முன் வைப்பதில் முன்னணியில் திகழ்ந்தார். திறனாய்வு தொடர்பில் இவருடைய எழுத்துக்கள் இத்துறைசார் ஆர்வலர்களுக்கு



என்றென்றைக்கும் பயன்படக் கூடியது. மூத்த எழுத்தாளர்களின் வழிகாட்டலை மதித்தல், சமகால எழுத்தாளர்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படுதல், புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்மாதிரியாகத் திகழுதல் என, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த இலக்கிய செயற்பாட்டாளர்களிடையே தோழமையைப் பேணுவதில் மிகச் சிறந்த அனுகுமுறையை பின்பற்றியவர்.

லெனின் மதிவானத்துக்கு தனது தந்தை ஜெயராமனின் வழியில் ஒரு பெருங்கனவு இருந்தது. அது மலையக தேசியம் குறித்ததானது. இந்தச் சமூகத்துக்கு நிலம் உறுதி ஆக வேண்டும் என்பதில் அவர் தனது தந்தையைப் போலவே உறுதியாக இருந்தார்.

"மலேசிய தமிழர்களின் சமகால வாழ்வியல் பரிமானங்கள் – சில அவதானிப்புகள்", "பேராசிரியர் கைலாசபதியின் சமூக மாற்றத்தின் இயற்காற்றல்", "மலையகம், தேசியம், சர்வதேசியம்", "ஊற்றுக்களும் ஓடங்களும்" ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

எழுத்தாளர் லெனின் மதிவானம் அவர்களுக்கு 'வானவில்' தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**–வானவில் ஆசிரியர் குழு**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பிரஜாவுரிமை உள்ளவர்கள் இலங்கையில் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது எனச் செய்யப்பட்டிருக்கும் விதி. இது முழுக்க முழுக்க இலங்கைப் பிரஜாவுரிமையுடன் அமெரிக்க பிரஜாவுரிமையையும் கொண்டிருக்கும் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த பசில் ராஜபக்சவை இலக்கு வைத்து செய்யப்பட்ட ஏற்பாடு என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

ஏனெனில், பசில் ராஜபக்ச தான் சிறீலங்கா பொதுசன பெரமுனவை குறுகிய காலத்துக்குள் கட்டியெழுப்பி, சகல தேர்தல்களிலும் வெற்றிக்கு இட்டுச்சென்ற மூளையாகவும் அச்சாணியாகவும் செயல்பட்டவர். அது மாத்திரமின்றி, எதிர்காலத்தில் இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட்டு ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதற்கான வெற்றி வாய்ப்பையும் கொண்டிருப்பவர்.

ஆனால், இந்தச் சட்டச் சரத்து எவ்வளவு தூரம் பசில் ராஜபக்சவின் வருங்கால செயற்பாட்டைப் பாதிக்கும் என்பதை இப்போதைக்கு கூறிவிட முடியாது. அவர் சில வேளைகளில் அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்துவிட்டு தேர்தல்களில் போட்டியிடக்கூடும். அவ்வாறு இல்லாவிட்டாலும், பெரமுன கட்சியின் பின்னால் இருந்து கொண்டு அக்கட்சியின் எதிர்கால வெற்றிக்கு வியூகங்கள் வகுத்துச் செயல்படலாம். அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தென்பட ஆரம்பித்துள்ளன.

அதாவது அவர் அமெரிக்காவில் இருந்து கொண்டே எதிர்காலத்தில் பெரமுனக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல்களில் இணைந்து போட்டியிடுவது சம்பந்தமாக ஐ.தே.க. தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாக தெரிய வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் ஏற்கெனவே பலவீனப்பட்டுப் போயுள்ள ரணில் விக்கிரமசிங்கவும் அதையே விரும்புவார். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் இந்த இரண்டு கட்சிகளும் அமைக்கும் கூட்டணிதான் அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் நிச்சயம் வெற்றியீட்டும்.

இது ஒருபுறமிருக்க, 22 ஆவது திருத்தச் சட்டத்தில் இன்னுமொரு முக்கியமான விடயமும் இடம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் சில தரப்பினருக்கு இருந்தது. அதாவது, இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக ஏதாவது புதிய ஏற்பாடுகள் செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பே அது. ஆனால் அவ்வாறான எதுவும் 22 ஆவது சட்டத் திருத்தத்தில் இடம் பெறவில்லை.

உண்மையில் 1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு நாடாளுமன்றத்தில் தனக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தி கொண்டு வந்த எதேச்சாதிகாரம் மிக்க இன்றைய அரசியல் யாப்பை முற்றுமுழுதாக மாற்றிவிட்டு, நாட்டின் இன்றைய சூழலுக்கு பொருத்தமான முழுமையான ஜனநாயகத்தன்மை வாய்ந்த புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதே சரியானதாகும். அப்படியான ஒரு யாப்பில் இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகளையும் உறுதி செய்யலாம். ஆனால், இலங்கையில் ஆட்சிக்கு வரக்கூடிய எந்தவொரு பிரதான கட்சிக்கும் அப்படியான எண்ணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, இத்தகையதொரு நிலைமையில், சிறுபான்மை இனங்களுக்கு – குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு – முன்னால் ஒரேயொரு வழிதான் உண்டு.

அதாவது, இனப்பிரச்சினக்கு தீர்வாகவும், அதே சமயத்தில் பிராந்திய அதிகாரப் பகிர்வாகவும், 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்திய மாகாண சபைகள் ஏற்பாடு இருக்கின்றது. இப்போதைய நிலைமையில் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை அது ஒரு சிறப்பான ஏற்பாடு. அந்த ஏற்பாடு ஏற்கெனவே அரசியல் அமைப்பில் இருப்பதுடன், இலங்கையில் செயல்படுகின்ற பெரும்பாலான அரசியல் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கிறது.

எனவே, இப்பொழுது நாட்டில் செயல்படுகின்ற – குறிப்பாக வடக்கு கிழக்கில் – சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் ஓரணியாக நின்று, நாட்டின் ஏனைய முற்போக்கு – ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் பெற்று, அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி அரசை வலியுறுத்துவதே செய்ய வேண்டிய நடைமுறைச் சாத்தியமான வழியாகும். நாட்டின் இன்றைய சூழ்நிலை அதற்கான பொன்னான சந்தர்ப்பமாகும்.

அதை விடுத்து ஒருபோதும் சாத்தியப்படாத சமஸ்டி கோருவதோ, மீண்டும் வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்துவதோ, குட்டையைக் குழப்பி, இனவாத சக்திகளின் கைகளை ஓங்கச் செய்து, இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் எட்டாக்கனியாக்க மட்டுமே உதவும் என்பதை அக்கறையுள்ள சக்திகள். புரிந்து கொள்வது அவசியம்.

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

கண்டறியப்பட்டது. அந்த இனத்திற்கு டெனிசோவான்ஸ் (Denisovans) எனப் பெயரிட்டனர். இந்த இனத்தின் மரபணு கிழக்கு ஆசிய மக்களின் மரபணுவில் சுமார் 6 விழுக்காடு கலந்திருப்பதை இவர்கள் கண்டறிந்தனர்.

ஆக, மூன்று முக்கிய மனித இனங்கள் இருந்துள்ளன. அவைகள் ஒன்றுடன் ஒன்று கலந்துள்ளன என்பதே இவர்களின் கண்டுபிடிப்பு. இதற்காகவே ஸ்வான்டே பாபுக்கு *04.10.2022* அன்று மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் சுவீடன் நாட்டை சேர்ந்த மருத்துவ ஆய்வாளர் ஆவர். ஆனால் இவர் ஜெர்மனியில் உள்ள மேக்ஸ் பிளாங்க் ஆராய்ச்சியகத்தில் (Max Planck Institute for Evolutionary Anthropology) இயக்குநராகப் பணிபுரிகின்றார்.

---

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

தடுக்கும் அமெரிக்காவின் முயற்சியும் உக்ரைன் மீதான போரில் ஒரு பங்கு ஆற்றியுள்ளது என்பதை நிராகரிக்கவே முடியாது.

இந்த நிலையில் மானுடத்தின் மிக முக்கிய சிக்கல்கள் கண்டுகொள்ளப் படாமல் போகின்றன. பட்டினியும் போர்களும் பூமியை வாட்டுகின்றன. அன்றாட வாழ்வின் நிதர்சன பிரச்சனைகளை தீர்ப்பதற்காகச் செல்ல வேண்டிய சமூக வளங்களோ, இராணுவ ஆதிக்கத்திலும் போர்களிலும் வீணடிக்கப் படுகின்றன.

**தமிழில்: அபிநவ் சூர்யா**

# அமெரிக்காவுக்கு சவால் விடும் வெனிசுவேலா-ஈரான் கூட்டணி

உலகில் பெட்ரோலியம் அதிகமாக இருக்கும் நாடுகளான வெனிசுவேலாவும், ஈரானும் இணைந்து தங்கள் மேல் சட்டவிரோதமாக விதிக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தடைகளை உடைக்க முடிவு செய்துள்ளன.

'ஒபெக்' (OPEC - பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு) நாடுகளில் வெனிசுவேலாவும், ஈரானும் முக்கியமான உறுப்பினர்களாவர். உலகிலேயே மிக அதிகமான பெட்ரோலிய இருப்புள்ள நாடுகளில் வெனிசுவேலாவும் முதன்மை வகிக்கின்றது. ஆனால், அமெரிக்கா விதித்துள்ள தடைகளால் பிற நாடுகளுடனான வர்த்தகத்தில் சிக்கல்கள் உள்ளன. அத்தோடு தனது உற்பத்தி மற்றும் சுத்திகரிப்புப் பணிகளை செய்ய முடியாமல் தடுமாறி வருகிறது. சுத்திகரிப்பு நிலையங்களை புதுப்பிக்க வேண்டிய அவசியமும், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

ஈரான் மீதும் அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது. கிட்டத்தட்ட வெனிசுவேலாவும், ஈரானும் ஒரே மாதிரியான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன. இந்நிலையில் இந்த இரு நாடுகளும் கைகோர்க்க முடிவு செய்திருக்கின்றன. அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியான ஒருங்கிணைப்புக்கு இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த இரு நாடுகளின் ஒத்துழைப்புக்கு வெனிசுவேலாவின் முன்னாள் ஜனாதிபதி சாவேஸ் (Hugo Chávez) அடித்தளம் அமைத்திருந்தார். அவருக்கு அடுத்தபடியாக பொறுப்புக்கு வந்த நிகோலஸ் மதுரோ (Nicolás Maduro), அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்.

ஜூன் 2022 இல் இரு நாடுகளும் 20 ஆண்டுகளுக்கான ஒத்துழைப்புத் திட்டத்தில் கையெழுத்திட்டன. இந்தத் திட்டத்தில் வெனிசுவேலாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைப் பராமரிக்கும் பணிக்கு ஈரான் உதவி செய்யும் அம்சமும் உள்ளது. வெனிசுவேலாவிற்கு நான்கு எண்ணெய் வாகனங்களைத் தரவும் ஈரான் முன்வந்திருக்கிறது. வாராந்திர



விமானப் பயணங்களும் தொடங்கியுள்ளன. இரு தலைநகரங்களுக்கிடையில் தொடங்கப்பட்டுள்ள இந்த விமானப் பயணம் நல்ல முறையில் இயங்குவதால் கூடுதல் விமானப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யப் போகிறார்கள்.

எண்ணெய்க் கப்பல்களையும் வெனிசுவேலாவுக்கு ஈரான் அனுப்பியுள்ளது. வெனிசுவேலா ரஷ்யாவின் ரோஸ்நெவ்ட் (Rosneft) நிறுவனத்தோடு உடன்பாடு செய்திருந்தது. உக்ரைன் நெருக்கடியால் அமெரிக்கப் பகுதியில் ரோஸ்நெட் நிறுவனத்தை இயங்க விடாமல் அமெரிக்கா செய்து விட்டது. இதனால் ஈரானுடனான உடன்பாட்டில் வெனிசுவேலா கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. வெனிசுவேலாவின் கச்சா எண்ணெய் உள்ளிட்ட அனைத்துப் பெட்ரோலியப் பொருட்களையும் ஈரான் மூலமாக வர்த்தகம் செய்யப் போகிறார்கள். இதற்கான பெரிய திட்டங்களை உருவாக்கி அமெரிக்காவின் தடைகளை உடைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுப் பொருளாதார ஆணையம்**

வெனிசுவேலா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஒரு கூட்டுப் பொருளாதார ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. வெனிசுவேலாவின் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராமோன் வேலஸ்குவேஸ் (Ramón José Velásquez Mujica) தலைமையில் ஒரு குழு ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்கு வந்துள்ளது. செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுதந்தரமாக வாழ வேண்டும் என்ற எங்கள் கனவுகளை நனவாக்க நாங்கள் பெரும் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். பெரும் சவால்களும் உள்ளன. இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது மற்றும் பரஸ்பர உதவி ஆகியவை கனவுகளை நனவாக்க உதவும்' என்றார்.

ஈரானில் தயாரிக்கப்பட்ட ஆயிரம் கார்கள் வெனிசுவேலாவில் இறக்குமதியாகியுள்ளது. மேலும் வாகனங்களை வாங்கவும் முடிவு செய்திருக்கிறார்கள். இரு தரப்பு வர்த்தகம் மற்றும் ஈரான் மூலமாக ஆசிய நாடுகளுடனான வர்த்தகம் என்று பல முனைகளில் வெனிசுவேலா திட்டமிட்டிருக்கிறது. அமெரிக்காவோ, சீனா–ரஷ்யா–கியூபா–வெனிசுவேலா–ஈரான் என்ற அச்சு உருவாகுவதாகக் கூறியுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரான் – சீன– ரஷ்ய கூட்டணி கை ஓங்கி, அமெரிக்காவின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்து இருக்கின்றது. அமெரிக்க இராணுவத்தின் கடல்வழி மேலாண்மை, சீனாவின் belt and raod initiative (BRI) முன்னேடுப்பினால் கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் பொருளாதாரத் தடை என்று டொலரையும், டொலர் பரிமாற்றத்தையும் ஆயுதமாக்கியதன் விளைவாக பல்வேறு நாடுகளும் டொலர் தவிர்த்த சொந்த நாணயத்தில் வர்த்தகம் செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது. சீனா, ரஷ்யா, வெனிசுவேலா, ஈரான், கம்போடியா போன்ற நாடுகளின் மத்திய வங்கிகள் மின்னணு நாணயங்களைப் பயன்படுத்த ஆயத்தமாகி வருகின்றன.